விலை: 60.00
பக்கங்கள் : 20
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka




# வலம்புரி
## சங்குநாதம்

சங்கு 23
ஒலி 287 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 15 ஞாயிற்றுக்கிழமை (02.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## 40 ரூபாயினால் பெற்றோல் விலை குறைப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையை குறைக்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தீர்மானித்துள்ளது.

இந்த விலை குறைப்பானது நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் 19

## மின்கசிவினால் இளம் தம்பதிகள் தீயில் கருகி சடலங்களாக மீட்பு

### வல்வெட்டித்துறை நெடியகாடுப் பகுதியில் சோகம்

(கரணவாய்)

வல்வெட்டித்துறை நெடியகாடுப் பகுதியில் மின்கசிவினால் ஏற்பட்ட தீ விபத்துக் காரணமாக இளம் தம்பதிகள் இருவர் தீயில் கருகி உயிரிழந்தனர் என பிரேத 19



## அழுத்தங்களையடுத்து அடிபணிந்தார் ஜனாதிபதி ரணில்

### அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கான வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டது.

*(கொழும்பு)*

**சர்வதேச மற்றும் உள்நாட்டில் ஏற்பட்ட கடுமையான அழுத்தங்களையடுத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பிறப்பிக்கப்பட்டிருந்த அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான வர்த்தமானி இரத்துச் செய்யப்பட்டுள்ளது.**

இந்த நிலையில், அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான வர்த்தமானியை இரத்துச் செய்து புதிய வர்த்தமானி அறிவித்தலை ஜனாதிபதி வெளியிட் 19



## சர்வகட்சி அரசுக்கு தேசிய சபை தீர்வல்ல

### குணதாச அமரசேகர

(கொழும்பு)

இலங்கையில் அண்மையில் அமைக்கப்பட்ட தேசிய சபை, சர்வகட்சி அரசாங்கத்தை நோக்கமாக கொண்டு அமைக்கப்படவில்லை என தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் அழைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர குற்றஞ்சாட்டியுள்ளார்.

அனைவரினதும் கோரிக்கையாக இருக்கும் சர்வகட்சி அரசாங்கத்துக்கு தேசிய சபை ஒரு தீர்வல்ல எனவும் கட்சி தலைவர்களுக்கு 04

## இரண்டு இலட்சம் பேர் இலங்கையில் வேலை இழக்கும் அபாயம்

(கொழும்பு)

இலங்கையில் மின் கட்டண உயர்வினால் பல நிறுவனங்களை நடத்த முடியாமல், ஏறக்குறைய சுமார் இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் வேலை இழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, தொழிலாளர் சங்கத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மின் கட்டண அதிகரிப்பால் சமாளிக்க முடியாதளவில் கடும் நஷ்டம் ஏற்படுவதால் பல நிறுவனங் 19

## கடற்றொழிலுக்கு செல்ல வேண்டாம்


### மீனவர்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

காலியிலிருந்து அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் எதிர்வரும் 24 மணித்தியாலங்களுக்கு கடற்றொழிலில் ஈடுபட 19

## புதிய வரி விதிப்பு அறிமுகம்

### பொருட்கள், சேவைகளின் விலைகள் மேலும் உயர்வடையும்



(கொழும்பு)

சமூக பாதுகாப்புக்கு பங்களிப்பு வழங்கும் வகையிலான புதிய வரி நேற்று முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம், 140 பில்லியன் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

எவ்வாறாயினும், இந்த புதிய வரி விதிப்பினால், பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் மேலும் உயரக்கூடும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறான வரிகள் அரசாங்கத்திற்கான வருமானத்தை ஈட்டுவத 04

## மதுபானம் சிகரெட் விலைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மதுபானம் மற்றும் சிகரெட் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளது. 19


### யாழ்ப்பாண பல்கலைக்கழக

## விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாக பதவியுயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்கள் இருவர் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கிறிஸ்தவ மற்றும் 19




## ரணில் அரசால் பிரச்சினைகளுக்கு தீர்வினை காண முடியாது

### உதய கம்மன்பில தெரிவிப்பு

(கொழும்பு)

இந்த அரசின் போக்குச் சரியில்லை. அது வீழ்ச்சிப் பாதையில் செல்கின்றது. நாட்டில் அரசியல், பொருளாதாரம் என எந்தப் பிரச்சினைகளுக்கும் இந்த அரசால் தீர்வு காண முடியாது என புதிய ஹெல உறுமயவின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார். 19



**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான
தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்
யாழ். **கலாலயா** பயிற்சியகம்
விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே! சொந்தமாக தொழில் செய்ய விரும்பும் நங்கையரே!!
**உங்களுக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!**

கேக் ஐசிங், உணவு தயாரித்தல், Hair Dressing & Styling
அழகுக் கலை, Facials, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம்
முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான
7 முறைகளில் சேலை அணிதல் போன்ற பயிற்சிகள்...



கிழமை நாள் மற்றும் சனி, ஞாயிறு புதிய பிரிவுகள்
05.10.2022 புதன் (விஜயதசமி) அன்று ஆரம்பமாகின்றன

(C-5012)

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். -இயக்குநர்-

## மூதாளர் அன்பு இல்லத்தில் முதியோரை இணைத்துக் கொள்ளல்

**சைவத் தமிழ்ச்சங்கம் - அருள்மிகு சிவன் கோவில்**
**அன்பே சிவம் அறக்கட்டளை**
**சிவபுரவளாகம் - மூதாளர் அன்பு இல்லம்**
**மூதாளர் அன்பு இல்லத்தில் இணைந்து**
**வாழ விருப்புடையோர்**
**" பெற்றோரைப் பேணுதல் பிள்ளைகளின் கடமை"**

- ◆ இல்லத்தில் வாழ்வதற்கு 60 வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
- ◆ நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையால் பாதிக்கப்பட்ட தனித்து வாழும் மூதாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ◆ விண்ணப்பங்களை A9 வீதி, முகமாலை சிவபுர வளாகத்தில் பெற்று பூரணப்படுத்தி பாதுகாவலர் அல்லது உறவினர் மூலமாக இணைந்து கொள்ள முடியும்.

(12963)

தொடர்புகளுக்கு:

நிறைவேற்றுப் பணிப்பாளர்
சிவபுர வளாகம்
A-9 வீதி, முகமாலை, பளை.

நிறைவேற்றுப் பணிப்பாளர்
திரு.குமரேசன் குமணன்
077 622 4038/ 077 617 1397

## வேலையாட்கள் தேவை

சாவகச்சேரி தனங்கிளப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட உணவகம் / குளிரகம் இரண்டுக்கும் சமையற்காரர்கள்/யூஸ் மேக்கர்கள் தேவை. (12964)

தொடர்பு கொள்ளவும்
076 722 2115, 077 629 0894

## மணமகள் தேவை

யாழ்.இந்து கொழும்புத்துறையை பூர்வீகமாகக் கொண்ட தற்போது லண்டன் PR உடைய 1984ஆம் ஆண்டு பிறந்த மணமகனுக்கு படித்த, அழகிய மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு
0777 - 323585
077 - 4531364
(12926)

## Jaffna College Institute of Technology

**மாணவர்களுக்கான புதிய கற்கைநெறிகள்**
**10 OCT 2022 ஆரம்பமாகின்றன.**

**Civil Draftsperson (NVQ level 4) course - 1 year**
Minimum Qualification Passed G.C.E.(O/L) with pass in Mathematics & English
**Course leads to:**
- ➢ Follow course in NVQ level 5
- ➢ Register for drawings at local councils

**Computer Certificate Courses ( 3 - 4 months Part time)**
- ➢ Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- ➢ Certificate in Graphic Designer - (PageMaker, PhotoShop & CorelDraw)
- ➢ Web Designing-(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- ➢ AutoCAD 2D & 3D Modeling
- ➢ Java, C++ Programming
- ➢ Accounting Package Tally

Our Civil Draftmanship & Computer courses will be held in our Jaffna centre along 464 Hospital Road, Jaffna too

**Certificate in Craft Courses** (6 மாதங்கள் முழு நேரம் - தமிழ் மொழி மூலம்)
- ➢ அலுமினியம் பொருத்துதலும், இணைத்தலும் - Aluminum Fabrication

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது.
(TVEC) பதிவு இலக்கம் : P25/0014, Facilities : Sports

For More Information : DIRECTOR
JAFFNA COLLEGE INSTITUTE OF TECHNOLOGY
VADDUKODDAI, JAFFNA , SRI LANKA.
Tel :0212223382/0212250975 E-mail: ejcit@sltnet.lk
(C-5011)

# மரண அறிவித்தல்



அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

(12958)

## திருமதி சிவசக்தி ஸ்ரீகந்தராசா

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 20.08.1963 | 29.09.2022 |

அச்சுவேலி வடக்கு, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவசக்தி ஸ்ரீகந்தராசா அவர்கள் கடந்த (29.09.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - பாலாமணி தம்பதிகளின் இளைய மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஸ்ரீகந்தராசாவின் பாசமிகு மனைவியும் தர்மநாயகி, காலஞ்சென்றவர்களான கனகலிங்கம், ஈஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணஈஸ்வரி (மண்டைதீவு), நகுலேஸ்வரி (கிளிநொச்சி), அரங்கநாயகி (கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஸ்ரீவரதன் (சுவிஸ்), காலஞ்சென்ற பவித்திரா மற்றும் கஜந்தன் (லண்டன்), கிருசாந்தன் (லண்டன்), சுஜிக்கா (லண்டன்) ஆகியோரின் பிரியமிகு தாயாரும் றெஜீனா (சுவிஸ்), சுகன்ஜா (லண்டன்), திலக்ஷன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் றிவான், விகான், நிலான், லியா, லயா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணியளவில் அவரது இல்லத்தில் (அச்சுவேலி) நடைபெற்று வல்லை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- அன்புக் கணவர் ஸ்ரீகந்தராசா (சிறி)
தொ.பே:- 077 849 6546, 077 770 5101,
+447577487433, +41788383727

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நவம்பர் மாதம் முதல்
### பாலர் பாடசாலை மாணவர்களுக்கு
# இலவச காலை உணவு

(கொழும்பு)

பாலர் பாடசாலை மாணவர் களுக்கு காலைநேர உணவு வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பிக்க இருக்கின்றோம். எதிர்வரும் நவம்பர் மாதம் நாட்டில் இருக்கும் அனைத்து பாலர் பாடசாலை மாணவர்க ளுக்கும் காலை உணவு இல வசமாக வழங்குவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என சிறுவர் மற்றும் பெண்கள் விவகார இராஜாங்க அமைச் சர் கீதா குமாரசிங்க தெரிவித் தார்.

சிறுவர்களின் மந்தபோசனம் அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் எடுத்துவரும் நடவ டிக்கை தொடர்பாக குறிப்பிடுகை யிலேயே இவ்வாறு தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் தொட ர்ந்து தெரிவிக்கையில்,

இந்த வேலைத்திட்டத்தை தொடர்ந்து மேற்கொள்வதற் கான திட்டத்தை தயாரித்திருக் கின்றோம். ஏனெனில் தாய்ப் பாலுக்கு பின்னர் குழந்தைகள் பாலர் பாடசாலைக்கு செல்ல ஆரம்பிக்கின்றனர். இதன்போது அவர்களுக்கு போஷாக்கு கிடை க்க வேண்டும் என மேலும் தெரி வித்தார். (4)

# கடன் மறுசீரமைப்பு நடவடிக்கையை இலங்கை துரிதப்படுத்த வேண்டும்
## உலக வங்கி வலியுறுத்து

**(கொழும்பு)**

**இலங்கையில் கடன் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அத்துடன் இலங்கை கடுமையான கடன் நெருக்கடியில் சிக்கியுள்ளதால் அவர்கள் விரைந்து செயற்பட வேண்டியது அவசியம் என உலக வங்கியின் தலைவர் டேவிட் மல்பாஸ் தெரிவித்துள்ளார்.**

இலங்கை, சர்வதேச நாணய நிதியத்துடன் மாத்திரமின்றி ஜப்பான், சீனா மற்றும் இந் தியாவுடன் இணைந்து செயற் படுவது ஒரு நல்ல போக்காகும்.

ஆனால் ஒரு திட்டத்தை தயாரித்து அதை விரைவில் செயற்படுத்துவது மிகவும் அவசி யம் என உலக வங்கி தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை யின் வெளிநாட்டுக் கடன் பிர ச்சினையைத் தீர்ப்பதற்கு முழந் தையை உச்சமட்டத்தில் செய்வ தற்கு தயாராக இருப்பதாக ஜப்பானும் தெரிவித்துள் ளது.

இலங்கையின் கடன் பிரச் சினையை தீர்க்க சீனா, இந் தியா போன்ற கடன் வழங்கும் நாடுகளும் தலையிட வேண் டும் என ஜப்பான் நிதி அமைச்சர் ஷூனிச்சி சுசுகி தெரிவித்துள் ளார். (4)

# இலங்கையில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடும்
## அமெ.தூதுவர்

கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தை திறந்து வைப்பதன் மூலம் இலங்கையர்களின் கன வுகளை நனவாக்க ஐக்கிய அமெ ரிக்கா தனது கரங்களை நீட்டியது டன் மகிழ்ச்சியான நட்புறவை யும் உறுதிப்படுத்தியது.

கொழும்பில் புதிய அமெரிக்க மையத்தை திறந்து வைத்து உரையாற்றிய அமெரிக்க தூது வர் ஜூலி சுங் இந்த சவாலான நேரத்தில் அமெரிக்கா இலங்கை மக்களுக்காக தொடர்ந்து முதலீடு செய்யும் என்றும் தெரிவித்தார்.

அமெரிக்காவும் இலங்கை யும் நண்பர்கள் என்றும் மதிப்பு மிக்க ஜனநாயக நாடுகள் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையர்களுக்கு இது ஒரு சவாலான நேரம் என தெரி வித்த ஜூலி சுங் இலங்கையில் உள்ள மக்களுக்காக அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்து வருகி ன்றது எனவும் இந்த மையம் அதற்கு ஒரு எடுத்துக் காட்டு என் றும் அவர் குறிப்பிட்டார். (4)

# பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும்
## அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)

சமூக பாதுகாப்பு பங்களி ப்பு வரி இன்று முதல் அமுலு க்கு வரும் நிலையில் பேக்கரி உற்பத்திகளின் விலைகள் மீண்டும் அதிகரிக்கலாம் என அகில இலங்கை பேக்கரி உரி மையாளர்கள் சங்கம் தெரிவித் துள்ளது.

பாண் உள்ளிட்ட தமது உற் பத்திப் பொருட்களுக்கு புதிய வரி விதிக்கப்படும் என சங்கத்தின் தலைவர் என்.கே.ஜெயவர்தன தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவுக்கு வரிவிதி க்கப்படவுள்ளதுடன் பிரதான கோதுமை மா இறக்குமதியாள ர்கள் தமது விலைகளை அதிக ரித்தால் அது தானாகவே பேக்கரி தொழிலை பாதிக்கும்.

மேற்கூறிய அனைத்து கார ணிகளின் விளைவாக பேக்கரி பொருட்களின் விலைகள் உய ரும். ஆனால் அவை எந்த விகி தத்தில் அதிகரிக்கப்படும் என் பதை தீர்மானிக்கவில்லை என் றும் அவர் மேலும் தெரிவித்துள் ளார். (4)


# மரண அறிவித்தல்



பிறப்பு 27 – 06 – 1939

இறப்பு 01 – 10 – 2022

## பிலிப்புப்பிள்ளை யோசெப்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் இளவாலை மற்றும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பிலிப்புப்பிள்ளை யோசெப் அவர்கள் நேற்று (01.10.2022) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிலிப்புப்பிள்ளை - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா - அன்னேசம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் மேரி யோசேப்பின் மாசில்லா (இராசமணி) அவர்களின் அன்புக் கணவரும் ஆன் பிரியசாந்தினி, பிரதீபா காயத்திரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற திரேசம்மா மற்றும் மேரி யோசேப்பின் பரிமளம் ஆகியோரின் அருமைச் சகோதரனும் கஜபதியின் அன்பு மாமனாரும் வருண், சுருதி ஆகியோரின் அன்புப் பேரனும் லெஸ்லி, எமிலி மற்றும் ஜெஸ்லி ஆகியோரின் பாசமிகு தாய்மாமனும் புளோரன்ஸ் செல்வநாயகி, எட்வேர்ட் ரட்ணசிங்கம் மற்றும் அல்பிரட் திசநாயகம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.10.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் வைற் கவுஸ் மலர்ச்சாலையில் (இல. 180, பிரதான வீதி, யாழ்ப்பாணம்) அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (03.10.2022) திங்கட்கிழமை 5ஆம் கட்டை, பெரியவிளான், இளவாலையில் அமைந் துள்ள அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பிற்பகல் 3.30 மணியளவில் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு அன்னாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 12/1, நெல்லியடி ஒழுங்கை, கொக்குவில்.
தொடர்பு : 077 710 1367

தகவல் :- மகள்




வவுனியா பொது மருத்துவ மனை யில் சிகிச்சை பெறும் நோயாளர்கள் எதிர் நோக்கும் அசௌகரியங்களுக் கும் தீர்வினை பெற்றுக்கொடுக்கும் நோக்கோடு வவுனியா பொது மருத் துவமனை நோயாளர் நலன்புரி சங் கத்தினால் மருத்துவமனை வளாகத் தில் அலுவலகம் ஒன்று திறந்துவைக் கப்பட்டு ள்ளது.

(படம்:சதீஸ்)

# பெற்றோர்கள், மாணவர்களிடம் தேவையற்ற நிதி அறவீட்டை தவிருங்கள்
## கல்வி அமைச்சு

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் அங்கீகரிக் கப்பட்ட பாடசாலைக் கட்டணம் தவிர்ந்த சிறுவர், ஆசிரியர் தினம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளுக்காக மாணவர்கள் அல்லது பெற்றோர்களிடம் இருந்து நிதி அறவிடுவதைத் தவிர்க்குமாறு கல்வி அமைச்சின் செயலாளர் நிஹால் ரண சிங்க, பாடசாலை அதிகாரிகளிடம் விசேட கோரிக்கை விடுத்துள்ளார்.

பாடசாலைகளில் முறைசாரா வகை யில் நிதி அறவிடுவதை தடைசெய்து 2015/5 சுற்றறிக்கை வெளியிடப்பட் டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கடுமையான நிதி நெருக்கடிக்கு மத்தியில் பெற்றோர்கள் இருக்கும் நிலை யில் தேவையற்ற சுமைகளை அவர்கள் மீது சுமத்தாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவர், குறிப்பாக அதிபர் கள் இவற்றை செயற் படுத்தாமல் கவன மாக இருக்க வேண்டும் என்றார்.

அந்த வகையில் பல்வேறு நிகழ்வுக ளுக்காக மாணவர்கள் அல்லது பெற்றோர் களிடம் இருந்து நிதி அறவிடுவதைத் தவிர் க்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
ஒரே தாய் ஒரே குலம்



**மேல் மருவத்தூர்**
**ஆதிபராசக்தி சித்தர் பீடம்**
**கிளானை அல்வாய்**

**நவராத்திரி விழா**
**(25.09.2022 - 5.10.2022)**

கிளானை ஆதிபராசக்தி மன்றத்தில் நவராத்திரி விழா அன்னையின் அருளாசியுடன் சிறப்பான முறையில் நடைபெற்று வருகிறது.

சக்திகளும் பக்தர்களும் அகண்ட தீபத்தில் முக்கூட்டு எண்ணெய் ஊற்றி ஊற்றி 5.10.2022 வரை வழிபடலாம் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

அனைவரும் வருக அன்னையின் அருள் பெறுக!

ஓம் சக்தி

விழா அனுசரணை
சக்தி.ச.புஸ்பமலர்
(C-5013)

இங்ஙனம்
ஆலய நிர்வாகம்
077 620 3461



## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் 15 பரப்புக் காணி விற்பனைக்கு**

- A9 வீதியிலிருந்து 200 M தூரம்
- 20 அடிப் பாதையுடன்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நாவற்குழி சந்தியிலிருந்து 500m தூரத்தில்
- 1 பரப்பின் விலை - 3 இலட்சம் மட்டும்
- பார்வையிடும் நேரம் - காலை 9.00 இருந்து மாலை 6.00 மணி வரை

(12970)

**077 874 8135**


# மகாத்மாஜீ விளையாட்டுக்கழகத்தின் உதைபந்தாட்ட தொடர் இறுதிப்போட்டி இன்று





மகாத்மாஜீ சனசமூக நிலையத்தின் 70 ஆவது ஆண்டு விழாவினை முன் னிட்டு மகாத்மாஜீ விளையாட்டுக்கழகம் யாழ்.லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியானது இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் மகாத்மாஜீ விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப்போட்டியில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழகம் எதிர் உரும்பிராய் உதய சூரியல் அணிகள் போட்டியிட உள்ளன.

1 ஆவது போட்டி திருநெல்வேலியில் அமைந்துள்ள மைதானத்தில் நடைபெறும். (4)

## புதிய வரி...

ற்கு தற்காலிகமாக பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ம-7)


## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பற்சிகிச்சை நிலையம் ஒன்றிற்கு (Dental clinic) பகுதி நேர வேலைக்கு 3 km தூரத்திற்குள் வசிக்கும் O/L படித்த ஒரு பெண் பிள்ளை தேவை. (12967)

**077 110 1045**
**077 487 1028**


## சர்வகட்சி...

நேற்று அனுப்பிய கடிதத்தில் கலாநிதி குணதாச அமரசேகர குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடியை தீர்ப்பதற்கு இலங்கை அரசாங்கம் ஒரு நிலையான திட்டத்தை முன்வைக்க வேண்டுமெனவும் தேர்தலை நடத்துவதற்கான ஒரு திகதியை உடனடியாக அறிவிக்க வேண்டுமெனவும் தேசிய அமைப்புக்கள் ஒன்றியத்தின் அழைப்பாளர் கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தியுள்ளார்..

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் பிரச்சினைகளுக்கு மூல காரணமான பொருளாதார நெருக்கடியை தீர்க்க அரசாங்கம் இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதனால் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கு நாட்டின் பிரச்சினையை தீர்க்க முடியும் என்ற நம்பிக்கை மக்கள் மத்தியில் இல்லையென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ம-7)


## மரண அறிவித்தல்

பிறப்பு
23 - 09 - 1948



இறப்பு
30 - 09 - 2022

**கனகரத்தினம் இராசரத்தினம் (வவா)**

இல.36/2, கச்சேரி நல்லூர் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராசரத்தினம்(வவா) 30.09.2022 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - திரவியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தியாகராசா - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சரஸ்வதி(சோதி) அவர்களின் அன்புக் கணவரும் திலோதினி, டினேசன், ரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் நவனீதன், பிரதீபராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌதமன், பிரவீன், அகரன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (02.10.2022) இன்று ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 36/2, கச்சேரி
நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

077 930 9729 (மருமகன்)
077 532 5730 (மகன்)

(12966)

தகவல்:
குடும்பத்தினர்



## விற்பனைக்கு

யாழ். சென்யோன்ஸ் பாடசாலைக்கு அண்மையில் 6 பரப்புக் காணியும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்திற்கு முன்பாக 6 பரப்புக் காணியும் யாழ். பலாலி வீதியில் வீனஸ் வைத்தியசாலைக்கு முன்பாக 6 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - கனகசபை தர்மகுலசிங்கம்

**TP - 077 723 2535**

இல.183,
காலி வீதி,
வெள்ளவத்தை.

(12969)

இல.185,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



## Pharmacist தேவை

நெல்லியடியில் திறக்கப்படவிருக்கும் Pharmacy இற்கு Pharmacist licence உள்ள Pharmacist முழுநேர வேலைக்கு தேவை.
சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு (C-5014)

**077 354 3507**



## விற்பனைக்கு

- தண்ணீர் இறைக்கும் இயந்திரம் (Robin) விற்பனைக்கு உண்டு.
- 05 kv ஜெனரேட்டர் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (12968)

**077 773 0567**



## வாடகைக்கு

இராச வீதியில் அமைந்துள்ள 2 ஏக்கர் காணியில் கோழிகள், ஆடுகள், மாடுகள் வளர்க்கக்கூடிய பண்ணை சுற்று புற மதில்களுடன் மற்றும் கொட்டகைகளுடன் வாடகைக்கு உண்டு. (12968)

**077 773 0567**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்ட சேவையாளர் சங்கம் சம்பள உயர்வு கோரி போராட்டம்



(கொழும்பு)

70 சதவீத சம்பள உயர்வைக் கோரி இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தினரால் நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை நகரில் நடைபெற்ற இப்போராட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் உள்ள இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பிரதிநிதிகள் பங்கேற்றிருந்தனர்.

மேற்படி சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்டோரின் பங்கேற்புடன் தலவாக்கலை மல்லியப்பு கோவில் சந்தி பகுதியில் ஆரம்பமான பேரணி, தலவாக்கலை நகரை வந்தடைந்து, அங்கு பாரிய ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

சம்பள உயர்வு மற்றும் தொழில்சார் சலுகைகளை வலியுறுத்தும் பதாகைகளை தாங்கியவாறு சங்க உறுப்பினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

2019 ஆம் ஆண்டு கைச்சாத்திடப்பட்ட கூட்டு ஒப்பந்தம் நேற்று முன்தினத்துடன் காலாவதியானது. இந் நிலையில் தற்போதைய வாழ்க்கைச் சுமைக்கேற்ப 70 வீத சம்பள உயர்வு வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது. (4)

## யூரியா உர விநியோகம் நேற்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)

பெரும்போகத்திற்குத் தேவையான யூரியா உரங்களை விவசாயிகளுக்கு வழங்கும் பணி நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்திய கடன் வரி மூலம் பெறப்படும் யூரியா உர இருப்பு விவசாயிகளுக்கு வழங்கப்படும் என ஆணையாளர் நாயகம் ஏ.எச்.எம்.எல்.அபேரத்ன தெரிவித்தார்.

முதல் கட்டமாக ஒரு விவசாயிக்கு ஒரு ஹெக்டேயருக்கு 20 கிலோ யூரியா உரம் வழங்கப்படும் என கமநல அபிவிருத்தி திணைக்களம் தெரிவித்துள்ளது.

குருநாகல், அம்பாறை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் உள்ள விவசாயிகளுக்கே உரம் முதலில் விநியோகிக்கப்படவுள்ளன. (4)


# மரண அறிவித்தல்

## அமரர். வேலன் ஐயாத்துரை



பாரதி வீதி, கோண்டாவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் ஐயாத்துரை அவர்கள் கடந்த 28.09.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம் சென்றவர்களான வேலன் இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் தேவராணியின் பாசமிகு கணவரும் ஜீவா, ஜீவவதனி, ஜெயவதனி, சுபாஸ்கரன், கிருபாகரன்,சுதாகரன் ஆகியோரின் அருமை தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 02.10.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(12959)

பாரதி வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தகவல்
குடும்பத்தினர்.



# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 25.05.1960

இறப்பு 02.10.2021

அமரர்.

**கோகிலதாஸ் றூபிமாலா**



ஊனை உருக்கி உயிர் தந்தாய்
உள்ளொளி பெருக்கி உயர்வு தந்தாய்
தேனை நிகர்த்த அன்பு தந்தாய்
எள்ளளவும் குறையா தியாகம் தந்தாய்
எம்முடன் நீடுவாழ்வாய் என்றிருந்தோம்
இடைவழியில் ஏனம்மா கைவிட்டாய்...

(சி-5008)

இல. 23, பேக்கரி ஒழுங்கை,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


# இராசிபலன்

02.10.2022
புரட்டாதி 15, ஞாயிற்றுக்கிழமை
சப்தமி முன்னிரவு 6.39 மணிவரை

மூலம் பின்னிரவு 2.26 மணிவரை
சுபநேரம் - 9.02-10.32 மணிவரை
இராகுகாலம் -4.32-6.02 மணிவரை

சரஸ்வதி பூஜை ஆரம்பம்
சந்திராஷ்டமம்
ரோகினி

வள்வன்



**மேஷம்** வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், அச்சுறுத்தல்கள் அகன்று ஆனந்தம் கூடும் நாள்.



**கடகம்** சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கடன் சுமை குறைய புதிய வழியைக் கையாள்வீர்கள், பகையொன்று நட்பாகலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**துலாம்** நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.



**மகரம்** குடும்ப பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பது நல்லது, செய்தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், புதிய பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.



**ரிஷபம்** உடல் நலன் பற்றிய கவலைகள் உருவாகி மறையும், குடும்பத்தில் சிறு சிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களில் சிறு தாமதம் ஏற்படலாம்.



**சிம்மம்** எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**விருச்சிகம்** பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், தொழில் வளர்ச்சி கூடும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும்.



**கும்பம்** எடுத்த காரியத்தில் எளிதில் வெற்றி கிடைக்கும், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.



**மிதுனம்** விருந்தினர் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.



**கன்னி** வழிபாட்டால் நம்பிக்கை கூடும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.



**தனுசு** சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும், உடல் நலனில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.



**மீனம்** எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், மற்றவர்கள் மத்தியில் உங்களின் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம்.

மற்றவர்கள் உன்னை ஏமாற்ற பாதிக் காரணம் நீதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்டெம்பர் மாதம் அதி உச்ச பணவீக்கம் !

(கொழும்பு)

**இலங்கையின் வரலாற்றில் அதிகப்பட்ச பணவீக்க விகிதம் செப்டெம்பர் மாதம் பதிவாகியுள்ளது. இலங்கையின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.**



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் தரவுகளின்படி செப்டெம்பர் மாத பணவீக்கம் 69.8 வீதமாக ஆக உயர்ந்துள்ளது.

அத்துடன், ஒகஸ்ட் மாதத்தில் பணவீக்கம் 64.3 வீதமாக பதிவாகியிருந்தது. இந்த நிலையில் ஒகஸ்ட் மாதத்தை விடவும் செப்டெம்பர் மாதத்தில் பணவீக்கம் 5.5 வீத அதிகரிப்பை பதிவு செய்துள்ளது.

இதேவேளை உணவுப் பணவீக்கம் ஒகஸ்ட் மாதத்தில் 93.7 வீதமாக இருந்த நிலையில் செப்டெம்பரில் அது 94.9 வீதமாக உயர்ந்துள்ளது. உணவில்லாப் பொருட்களின் பணவீக்கம், 50.2 வீதத்தில் இருந்து 57.6 வீதமாக உயர்ந்துள்ளது. இலங்கையின் பணவீக்க அதிகரிப்பானது மேலும் பொருட்கள், சேவைகளின் விலை அதிகரிப்பையே எடுத்துக் காட்டுகிறது. அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை தற்போது மும்மடங்காக அதிகரித்துள்ள நிலையில், மேலும் விலை அதிகரித்தால் மக்களுக்கு கிடைக்கின்ற வருமானம் அதனை ஈடு செய்யாது எனவும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். (4)

## புதிய இலவச கலை வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வாய்ப்பாட்டு, மிருதங்கம், வீணை, நடனம், வயலின் போன்ற புதிய வகுப்புக்கள் எதிர்வரும் 5 ஆம் திகதி புதன் கிழமை விஜயதசமி அன்று மலை 4 மணிக்கு சட்டநாதர் வீதி நல்லூரிலுள்ள இளங்கலைஞர் மன்ற கலாமன்றத்தில் ஆரம்பமாகும் என இளங் கலைஞர் மன்ற செயலாளர் அறிவித்துள்ளார். (4)

## அரியாலையில் குடிநீரின்றி அவதிப்பட்ட குடும்பங்களுக்கு குடிநீர் வசதி



(குப்பிழான்)

அரியாலையில் ஜே-96, 97 கிராம உத்தியோகத்தர் பிரிவு களை உள்ளடக்கிய பல பகுதிக ளையும் சேர்ந்த மக்கள் குடிநீர் வசதி இன்றி நீணடகாலமாகப் பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்த ஐந்நூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடிநீர் பெறுவதற்காக குழாய்க்கிணறு வசதி ஏற்படுத்தித் தருமாறு பூமணி அம்மா அறக்கட்டளையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இதற்கு அமைய அரியாலை கலைவாணி சனசமூக நிலையத்திற்குச் சொந்தமான சின்னாலங்கண்டு வீதியில் உள்ள காணியில் அறக்கட்டளையால் குழாய்க் கிணறு வசதி ஏற்படுத்தி குடிநீர்த்திட்டம் நேற்று முன தினம வெள்ளிக்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. (4-[illegible])

## ஹெரோயினுடன் மூவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸாரால் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை இரவு வெவ்வேறு இடங்களில் ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவர் கைதாகியுள்ளனர்.

இதன்போது நாவற்குழிப் பகுதியில் தலா 40 மில்லிகிராம் ஹெரோயினுடன் இருவரும் மறவன்புலோ பகுதியில் 15 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரும் கைதாகியுள்ளனர்.

கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (4-30)

## மனவளக்கலை பயிற்சிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட்டில யாழ். அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலை பயிற்சிகள் அறிமுக உரையுடன் நேற்று மால்ல 5 மணிக்கு இல. 81 பிறவுண்வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள அறிவுத் திருக்கோவிலில் ஆரம்பமாகியது.

சனிக்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை எளியமுறை உடற்பயிற்சிகள், எளியமுறை குண்டலினி தியானப் பயிற்சிகள், சித்தர்களின் காயகல்பப் பயிற்சிகள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4)

## இளையோரின் ஆக்கங்களை பகிரும் வட்டமேசை கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

விழுதுகள் ஆற்றல் மையத்தின் ஏற்பாட்டில் இளையோரின் ஆக்கங்களை பகிரும் வட்டமேசை கலந்துரையாடல் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது.

குறித்த வட்டமேசை கலந்துரையாடலில் வடக்கு மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் சார்ந்து விழுதுகள் அமைப்பின் இளையோரினால் சமூகத்தில் புரையோடி உள்ள பிரச்சினைகள் தொடர்பில் கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அறிக்கைகளாக வெளிப்படுத்தப்பட்டதுடன் குறித்த ஆய்வுகள்தொடர்பில் கருத்து பரிமாற்றங்கள் எதிர்காலத்தில் செயற்படுத்த வேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடலில் பங்குபற்றிய வர்களால் பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டன. (4-104-299)

## தொழில் தேடுவோரைப் பதிவு செய்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்கள தொழில் நிலையத்தால் மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் உள்ள தொழில் தேடுவோர் மற்றும் புதிதாக சுயதொழில் முயற்சிகளை ஆரம்பிப்பதற்கு ஆர்வம் கொண்டிருப்பவர்களைப் பதிவு செய்து வருகின்றது.

இதன் தொடர்ச்சியாக சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பழை, சங்கானை மற்றும் வேலணை பிரதேச செயலகப் பிரிவுகளில் உள்ள அனைத்து கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் ஊடாகவும் இப்பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

இதற்கான விண்ணப்பப்படிவங்களை தங்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகத்திலும் மற்றும் பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ள முடியும். பெற்றுக் கொள்ளும் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தி எதிர்வரும் 07.10.2022 வெள்ளிக்கிழமை அல்லது அதற்கு முன்னதாக கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் அல்லது பிரதேச செயலகத்தில் ஒப்படைக்க முடியும்.

பதிவுகள் தொடர்பான மேலதிக விபரங்கள், வழிகாட்டுதல்கள் தேவைப்படுமிடத்து 021 2219359 என்ற தொலைபேசியூடாக பெற்றுக்கொள்ளலாம்என யாழ்.மாவட்ட அரச அதிபர் க. மகேசன் அறிவித்துள்ளார். (4)



அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் 105 ஆவது ஆண்டு விழாவும் சிறுவர் மற்றும் முதியோர் கௌரவிப்பு நிகழ்வும் நேற்று சனிக்கிழமை காலை சைவ வாலிபர் சங்கத் தலைவரும் ஓய்வுநிலை மருந்தாளருமான க.நாகலிங்கம் தலைமையில் அளவெட்டி கும்பழாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. (படம்:ரவிசாந்.சிவசாந்தன்)

## உரம் வழங்குவதற்கான பதிவுகளை மேற்கொள்ளவும்

(சாவகச்சேரி)

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட 2022/23 காலபோக நெற்செய்கையாளர்களுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான பதிவுகள் நாளை திங்கட்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களினால் நாளை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை கட்டடத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் உரிய விவசாயிகள் 2022 ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டு, 2022 ஆம் ஆண்டிற்கான சந்தாப் பணம் செலுத்திய பற்றுச்சீட்டு, தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கிப் புத்தகம் ஆகியவற்றுடன் வருகை தருமாறும் அன்றைய தினம் மாத்திரமே பதிவுகள் இடம்பெறும் எனவும் மேலும் அவர் தெரிவித்துளளார். (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 363
Viber 076 636 3378



# திசை மாறும் தியாகங்கள்

• அபிமன்யு

உலகில் அகிம்சைப் போராட்டம் தோற்றுப் போன தாய் வரலாறு இல்லை. ஆயினும் அது தோற்றுப்போன வரலாறு ஒன்று உண்டு எனின் அது ஈழத்தமிழினத்தின் அகிம்சைப் போரே.

அதிலும் அகிம்சையின் உன்னத நாடான பாரத தேசத்திடம் கோரிக்கை வைத்து அக்கோரிக்கைகள் நிறைவேற்றப் படாமலே ஈழத் தமிழினத்தின் அகிம்சைப் போர் தோற்றுப் போனது எனும் வரலாறு கறை படிந்த வரலாற்றின் சாட்சி எனலாம்.

ஆம், அகிம்சை நாடான பாரத தேசத்தை கெஞ்சி கை நீட்டி கோரிய கோரிக்கை ஐந்தும் அடுப்பங்கரையில் தூக்கி வீசப் பட்ட காகிதத்தாள் ஆனதை எப்படி தமிழினம் மறந்து விடும்.

திலீபன் என்கின்ற அந்தத் தியாகச் செம்மல் வெறும் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நல்லூர் முன்றலில் தனது உண்ணா விரத நோன்பைத் தொடங்கினான்.

பார்ப்பவர்கள், கேள்விப்படு பவர்கள் அனைவரும் இந்தப் போராட்டம் ஒருபோதும் நிலைத்திடாது. இந்த சின்னப் பையனால் எவ்வாறு பட்டினி கிடக்க முடியும் என்றே எண்ணிக்கொண்டனர்.

ஆனால் அவனது இதயத்தில் எரிந்த தீச்சுவாலை தான் இறப்பை நோக்கிச் சென்றாலும் எனது கோரிக்கைகள் நிறைவேறாமல் போராட்டத்தை கைவிடப் போவதில்லை என்றவாறே இருந்தது.

பன்னிரெண்டு நாட்கள் நீர் கூட அருந்தாது நல்லூர் வீதியில் அந்த ஒலைக் கீற்றுக் கொட்டகையில் துஞ்சியது உயிர். அகிம்சையின் உச்சம் தொட்டு சுதந்திரம் பெற்ற பாரத தேசத்திடம் தோற்றுப் போய் மடிந்து போனது.

இது வரலாறு. அகிம்சைப் போர் தொடுத்து மடிந்து போன ஈழத்தமிழினத்தின் வரலாறு.

இனி இவ்வாறான தியாகங்கள் செய்ய எவராலும் முடிந்திடாது என்பது உறுதி.

ஆயினும் அந்த தியாகத்தை மழுங்கடிக்கும் செயல் கடந்த 26 ஆம் திகதி நல்லூர் வீதியில் நடந்ததெனும் போது நெஞ்சம் பதைபதைத்துப் போனது.

ஈழத்தமிழினத்தின் விடிவுக்



காய் நீர் கூட அருந்தாது உயிர் நீத்த வீரனை யார் நினைவு கூருவது என்பதே அந்தக் குழப்பத்துக்குக் காரணமாகிறது.

ஐயகோ, தமிழினத்தின் விடிவுக்காக மடிந்த அந்த வீரனின் நினைவில்கூட அரசியல் செய்யும் நிலை கண்டு நெஞ்சம் வெந்து போனது.

யார் நினைவேந்துவது என்பதில் தொடங்கிய இழுபறி வாய்த்தகராறாகி கைகலப்பில் முடிந்தது. அதுவும் அந்த அகிம்சை மடிந்த மண்ணில் நடந்தது என்பதை எண்ணும் போது இனி தமிழினத்திற்கு மீட்சி இல்லை என்பதை உணர முடிகிறது.

திலீபன் ஒட்டு மொத்த தமிழினத்திற்காகவுமே தன்னுயிரை தியாகித்தவன்.

ஆனால் நாம் இன்று நடத்து கொள்ளும் விதம் முகம் சுழிக்கும் வகை[illegible]றது.

குறுகிய அரசியல் நோக்கம் கொண்டவர்கள் திட்டமிட்ட இந்த நிகழ்வைக் குழப்பும் வகையில் நடந்து கொள்வதை ஏற்றுவிட முடியாது.

குறிப்பிட்ட குழப்பவாதிகள் தம்மை தமிழ் மக்களுக்கு சரியாய் அடையாளம் காட்டியிருக்கின்றார்கள் என்பதை நாம் இவ்விடத்தில் சொல்லித் தான் ஆக வேண்டும்.

ஒரு காலத்தில் எவ்வாறிருந்த வடக்கு-கிழக்கு இன்று போதையின் சொர்க்காபுரியாக மாறியிருக்கிறது.

போதையின் சதிராட்டத்தில் சிக்கிய இளைஞர்கள் தம்மை மறந்து அதற்கு அடிமையாகி மீள முடியாத பாதாள உலகிற்குள் புகுந்து கொண்டிருக்கிறார்கள்.

இவற்றைத் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலினூடே யாரோ மேற்கொண்ட வண்ணமே இருக்கிறார்கள்.

எம் அடுத்த சந்ததிக்கு மண் பற்றும்-இனப்பற்றும் ஏறி விடக்கூடாது. அதற்காக போதைவஸ்தை விதைத்து எம் மண்ணையும் எம் கல்வி கலாசாரத்தையும் சீர்குலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப் பற்றி இம்மியும் கவலை கொள்ளாது அதற்கான மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்ளாது தாமுண்டு தமது வேலையுண்டு என கமுக்கமாய் இருக்கும் அரசியல்வாதிகள் திலீபனின் நினைவேந்தலில் அரசியல் செய்ய முற்படுவது ஏன் என்ற கேள்வியை தமிழினம் தங்களின் முன் வைத்துள்ளதை நீங்கள் ஏன் இன்னமும் உணரவில்லை?

கடந்த சில வருடங்களில் உயிர்க் கொல்லி போதைவஸ்திற்கு அடிமையான இளைஞர்கள் எத்தனையோ பேர் இறந்து விட்டார்கள்.

இன்னும் பலரறிய எம் இளம் சந்ததி குறிப்பிட்ட சில அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் ஒன்றுகூடி போதை நுகர்ந்து பாழாய்ப் போய்க் கொண்டிருக்கிறது.

பேரினவாதிகளுக்கு இது சுவையே. ஏனெனில் அழிந்து போவது, பல தியாகங்களைச் செய்து சரித்திரத்தில் இடம்பிடித்த தமிழினமல்லவா.

ஆனால் இது தொடர்பில் எம் தமிழ் அரசியல் தலைவர்கள் வாய்மூடி இருப்பதற்குள் இருக்கும் அரசியலை தமிழ் மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

போதைவஸ்தை கொட்டி எம் அடுத்த சந்ததிக்கு எமது இனத்தின் அடையாளங் களை கடத்தாமல் தக்க வைக்கும் சிறுமைப்புத்தியாளர்களின் செயல் நிறைவேறிக் கொண்டு போகிறது.

நாமோ தமிழினத்தின் விடிவுக்காய் நீர் கூட அருந்தாது பன்னிரெண்டு நாட்கள் பட்டினி கிடந்து மடிந்து போனவன நினைவிடத்தில் வந்து அடிதடியிலும் அதட்டலிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம்.

இதைத் தென்னிலங்கை அரசியல்வாதிகள் எக் கண்ணோட்டத்துடன் பார்ப்பார்கள். உங்கள் ஒற்றுமை இதுவோ என்று எம்மை எள்ளி நகை செய்வது இன்னமும் உங்கள் காதுகளுக்கு கேட்கவில்லையா?

> “ எம் தமிழ் சந்ததியில் இனி இனப் பற்றும் மண் பற்றும் இருந்துவிடக் கூடாது என்பதற்காய் போதை விதைப்பு நடக்கிறது. நாமோ கண்டும் காணாததுமாய் கண்மூடி இருப்பதேனோ? ”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் கங்காணி கார்த்திகேயனைத் தவிர மற்ற எல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர். விதானையார் விசுவலிங்கம் ஆழ்ந்த யோசனையில் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த பண்டிதர் பரமலிங்கம் என்ன? விதானையார் ஒரு மாதிரியாக இருக்கிறியள். ஏதேனும் பிரச்சினையோ என வினவினார்.

**விதானையார்:** எனக்கு என்ன பிரச்சினை. தியாகதீபம் திலீபன்ர நினைவேந்தலில நடந்த சம்பவங்கள் தான் என்ர மனதைத் தாக்கிப் போட்டுது.

விக்கித்த குரலில் கூறியபடி விதானையார் விசுவலிங்கம் தோளில் கிடந்த சால்வையால் தன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

ஆலடியில் அமைதி நிலவியது. விதானையார் விசுவலிங்கத்தின் மூத்த மகன் மாவீரர். மாவீரர்களை நினைவேந்துவதற்குப் படைத்தரப்பினர் தடை செய்யும் போதெல்லாம் விதானையார் விசுவலிங்கம் அதனை எதிர்த்து நிற்பார்.

அதேபோலத்தான் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் என்றால், அது உணர்வுபூர்வமாக அனைத்துத் தமிழ் மக்களாலும் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்பது விதானையாற்ற நிலைப்பாடு.

எனினும் திலீபனின் நினைவேந்தல் மற்றும் மாவீரர் தினத்தை ஒரு சில தமிழ் அரசியல் கட்சிகள் தங்கட உபயமாக எடுத்துக் கொண்டு அரசியல் நடத்த வெளிக்கிட்டதால, விதானையார் மட்டுமல்ல எத்தனையோ மாவீரர்களின் குடும்பங்களும் கவலையோடுதான் இருக்கினம். ஆலடியில் இருந்த அனைவரதும் மனக் கண்களில இந்த நினைப்பே இருந்தது.

ஆலடியில நிலவிய மௌனத்தைக் கலைக்க வாத்தியார் வைத்திலிங்கம் குரல் கொடுத்தார்.


**வாத்தியார்:** நினைவேந்தல் என்பது எங்கட உரிமை. அதே போல அந்த நினைவேந்தலுக்கு எவரும் உரிமை கோரவும் முடியாது. மூன்று பிள்ளைகளைக் களப் பலி கொடுத்த மாவீரர் குடும்பங்கள் இந்த மண்ணில வாழ்ந்து கொண்டிருக்கினம். இந்த நிலையில போர்க் களத்தில எந்த உயிர் இழப்பையும் சந்திக்காதவர்கள் நினைவேந்தலைத் தங்களுக்குரியதாக ஆக்குவதை ஒரு போதும் அனுமதிக்க முடியாதென்பதால ஆலடியில அதனை ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவம். இவ்வாறு வாத்தியார் கூற, அதனை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர்.

**விதானையார்:** ஆரோ போராட, ஆற்றையோ பிள்ளைகள் களப் பலியாக இஞ்ச இருக்கிறவியள் நினைவேந்தலை தங்களுக்கு உரிமையாக்கிறதை விட்டிட்டு தமிழ் மக்களுக்குச் சேவை செய்ய வேணும் எண்டு நினைத்தால், எத்தனையோ சேவை செய்யலாம்.

**பண்டிதர்:** என்ன விதானையார் சொல்லுறியள்.

**விதானையார்:** இந்தாப் பாருங்க எங்கட இளம் பிள்ளைகளைக் கந்தறுக்கச் செய்யிறதுக்கு போதைவஸ் துவை திட்டமிட்டு வட பகுதியில விற்பனை செய்கிறார்கள்.

நில அபகரிப்பு, சட்டவிரோதக் குடியேற்றம், குருந்தூர் மலையில பௌத்த விகாரை கட்டுதல், திருகோணமலை கோணேஸ்வரர் ஆலயத்தைக் கபளீகரம் செய்தல் என்ற பேரினவாதிகளின்ர நிகழ்ச்சி நிரலில ஒன்றுதான் வட பகுதியில நடக்கிற இந்த போதைவஸ்து வியாபாரம்.



**பேரினவாத நிகழ்ச்சி நிரலில் ஒன்றுதான் இஞ்ச நடக்கும் போதைவஸ்து வியாபாரம்**

**சாத்திரியார்:** என்ர கதிர்காமத்துக் கந்தா சங்கதி அப்படியோ.

அதுதான் நானும் நினைச்சனான். ஏன் இந்த போதைவஸ்து வியாபாரத்தை பொலிஸாரால தடுக்க முடியாமல் இருக்குதெண்டு.

**விதானையார்:** எங்கட தமிழ் அரசியல் தரப்புகளில ஒரு கட்சி; இந்தா எங்கட தமிழர் தாயகத்தில போதைவஸ்தை நாங்கள் முற்றாக ஒழிக்கிறம் எண்டு வெளிக்கிட்டு அது தொடர்பில முழுமையாகச் செயற்பட்டால், அதுவும் எங்கட இனத்தைக் காக்கிற பணிதானே.

அதுபோல எங்கயெல்லாம் நில ஆக்கிரமிப்பு நடக்கிறதோ அதையெல்லாம் மக்கள் துணை கொண்டு தடுத்து நிறுத்திறம் எண்டு இன்னொரு தமிழ்க் கட்சி வெளிக்கிடலாம்.

இதுபோல தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை மையப்படுத்தி நாங்கள் களமிறங்கிறம் எண்டு மற்றொரு தமிழ்க் கட்சி சபதம் எடுக்கலாம். இப்படிச் செய்தால் தான் எங்கட தமிழ் இனம் இந்த மண்ணில நிலைத்து வாழும்.

விதானையார் விசுவலிங்கம் உணர்ச்சிவசப்பட்டவராக மூச்சு வாங்காமல் கூற, ஆலடியை அமைதி அடக்கிக் கொண்டது.

அதுசரி எங்க இன்னமும் கங்காணியைக் காணவில்லை மூப்பரின் குரல் ஆலடியில் ஒலிக்க, அந்நேரம் பார்த்து கங்காணி கார்த்திகேயன் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

இந்தா கங்காணியாருக்கு ஆயுள் நூறு சாத்திரியார் சதாசிவம் முன்மொழிந்தார்.

**கங்காணி:** என்ன சாத்திரியார் எனக்கு ஆயுள் நூறோ. அதுவரைக்கும் இருந்து நானும் கஷ்டப்பட்டு மற்றவர்களுக்கும் கஷ்டத்தை ஏன் கொடுப்பான். இந்தா இப்பவும் யாழ்ப்பாணப் பெரியாஸ்பத்திரிக்குத்தான் போயிற்று வாறன். என்ர சொந்தக்காரர் ஒருவருக்கு வருத்தம். ஐ.சியில வைச்சிருக்கினம். மூக்கால வயர் போகுது. கதை பேச்சு இல்லை.

**சிறாப்பர்:** மூக்கால வயர் போனால் அவ்வளவுதான். வெளிநாட்டில பிள்ளைகள் இருந்தால் சொல்லி அனுப்புங்க.

இன்னொரு நோயாளி இந்தக் கொண்டிசனில வந்தால், அவருக்கு மூக்கால வயர் விட வேணுமல்லோ. அப்ப இவரின்ர வயரைக் கழட்டிப் போடுவினம்.

எல்லாத்தையும் விரைவாகச் செய்யச் சொல்லுங்கோ... சிறாப்பர் கனகசபை ஆலோசனை கூறினார்.

**மூப்பர்:** அப்ப மூக்கால வயர் கொடுத்தால் அவ்வளவுதான் எண்டு நினைக்க வேணும் போல...

மூப்பர் இவ்வாறு கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோவிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மனித மனங்கள் இப்படிக் குறுகி விட்டதே வியாசரே?

**அம்மு முறிகண்டி**

**உடலில் பட்ட காயத்திற்கு மருந்து போட்டு ஆற்றி விடலாம். மனதில் பட்ட காயம் அவ்வாறில்லையே?**

மனித நாக்கு விடம் தடவிய அம்பைப் போன்றது. சிறு காயம் ஏற்பட்டாலே போதும்.

அதன் வலியும் வேதனையும் உயிரை மாய்க்கும் அளவில் இருக்கும்.

இப்போதைய சமூகம் பெரியவர்களை மதிக்கும் நிலையில் இல்லை. அவர்கள் பேச்சை கேட்பதாயும் இல்லை.

அவர்களின் பேச்சுக்கள் புறக் குடத்தில் ஊற்றிய நீராய் வழிந்தோடி விடும்.






நாடோடியும் மன்னன் ஆகலாம் எனக் கூறிய மக்கள் திலகம் பற்றிக் கூறுங்கள்?

**இதழினி புலோலி**

**பாசம் என்கின்ற வலையில் சிக்கித் தவிக்கும் சொந்தங்கள் பற்றிக் கூறுங்களேன் வியாசரே?**

பாசம் என்பது பணத்துடன் போட்டி போடுமாக இருந்தால் பணம் தான் வெல்லும்.

அதுதான் உலகம். ஒருவரிடம் பணம் இருக்கும் போது ஈயாய் மொய்ப்பதும் அவரிடம் பணம் இல் லாத போது எறும்பாய் கலைவதும் மனித குணம்.

ஒரு குடம் பாலில் ஒரு துளி விடம் கலந்து விட்டால் அந்த மொத்தப்பாலும் விடமாகி விட்டதென்று தானே பொருள்.

## அன்பு வாசகர்களே உங்கள் கேள்விகளை 076 097 3126 SMS செய்யுங்கள்

**மதுவன் மீசாலை**

**நாடோடியும் மன்னன் ஆகலாம் எனக் கூறிய மக்கள் திலகம் பற்றிக் கூறுங்கள்?**

திரைப்படத்தில் எதைச் செய்தாரோ அதை நிஜ வாழ்விலும் செய்து உண்மையான கதாநாயகனாக வாழ்ந்தவர் மக்கள் திலகம்.

துப்பாக்கி குண்டடிபட்டு மிகவும் இயலாமல் இருந்த போது நடிகர் கமல் பிறந்து ஆறு மாதங்களேயான தனது மகளுடன் மக்கள் திலகத்தை சந்திக்க செல்கிறார்.

அவரின் மகளை அன்பாக கையில் எடுத்து முத்தம் கொடுத்துவிட்டு மிகவும் சிரமப்பட்டு அறைக்குள் சென்றவர் தனது மனைவி ஜானகியின் நகைகளை அள்ளிக் கொண்டு வந்து கமலின் மகளுக்கு அன்பளிப்பாக கொடுத்து மகிழ்ந்திருக்கிறார்.

தான் கஷ்டத்தில் இருக்கும் போது கூட மற்றவர்களை மகிழ்வித்துப் பார்த்து அதில் மகிழ்வு காண்பவனே உண்மையான தலைவன்.

**அகிலன் கனகராயன் குளம்**

**ஐயா வியாசரே! தமிழர்களின் தாகம் எப்போது தீரும் ஐயா?**

தமிழினம் கடலில் பயணம் செய்த படகின் இயந்திரம் கோளாறாகிவிட்டது.

அதில் இருந்த இரண்டு துடுப்புக்களை எடுத்து ஆளாளுக்கு அங்கு போவோம் இங்கு போவோம் என அடிபட்டு அதையும் கடலில் வீழ்த்தி விட்டார்கள்.

இப்போது அந்தப் படகு நடுக்கடலில் அலை அடிக்கும் திசைக்கு திசை தெரியாது சென்று கொண்டிருக்கிறது.

தமிழினத்திற்கு தண்ணீர்த் தாகம் எடுக்கிறது. சுற்று முற்ற கடல் நீர் இருந்தும் அதை அருந்த முடியாத பாவிகளாய் நாவரண்டு துஞ்சிக் கிடக்கிறார்கள்.

இனி அவர்களுக்கு மீட்சி கிட்டும் என நாம் நினைக்கவில்லை.

**அன்பு வாசகர்களே!**
**உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை**
**076 097 3126**
**என்ற இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்**

**சுதன் தப்பிமான்**

**தமிழனின் பூர்வீக நிலங்களை அவர்களிடம் கையளிக்க ஆட்சியாளர்கள் பின்னிற்பது ஏன் வியாசரே?**

என்னது இது தமிழினத்தின் பூர்வீக நிலமா? இந்த வார்த்தை மட்டும் சரத் வீரசேகரவின் காதுக்கு எட்டியிருந்தால் இன்று உங்களை கடித்துக் குதறி இருப்பார்.

ஏனென்றால் அவரின் கூற்றுப்படி இது சிங்கள பௌத்த நாடு. இங்கு தாம் மட்டும் தான் வாழ இயலும்.

அதை விட சிவசின்னம் என்பது எல்லாம் இல்லை.

அவை அனைத்தும் பௌத்த சின்னங்களே என்று பெரும் பாரதத்தையே படித்திருப்பார்.

என்ன செய்வது தாயில்லையென்றால் அப்பன் சித்தப்பன் என்ற பழமொழியை நினைத்து வெம்புவதை விட வேறு எதையும் செய்து விட முடியாது.

**தருஷ் வதிரி**

**மனித மனங்கள் இப்படிக் குறுகி விட்டதே வியாசரே?**

ஒரு வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தம் அதிகரித்துள்ளது எனின் அந்த வீட்டில் ஏதோ சண்டை என்ற பொருளையும் அதே வீட்டில் தொலைக்காட்சிப் பெட்டியின் சத்தம் குறைக்கப்படுகிறது எனில் அடுத்த வீட்டில் ஏதோ சண்டை என்ற பொருளையும் தரும்.

மனித மனங்கள் இப்படிப்பட்டதே. அடுத்தவர் என்ன சொல்கிறார் என அவர்களை அவதானிப்பதிலேயே அதிக அக்கறை காட்டுகிறார்கள்.

மற்றப்படி தங்கள் வளர்ச்சிக்கு எதையும் செய்து விடுவதில்லை.

**ரவீந்திரன் கோப்பாய்**

**சாப்பாடு அருமை என்பதற்குள் இருக்கும் சூட்சுமம் என்ன வியாசரே?**

சாப்பாட்டு மேசையில் பலவித உணவுகள் அடுக்கிவிடப்பட்டு இருக்கின்றன.

கணவனும் மனைவியும் உணவு உண்டு கொண்டு இருக்கிறார்கள்.

சாப்பாடு அருமை, சாம்ட தூக்கல். வாழைப்பூ வறை அருமை, கத்தரிக்காய் குழம்பு பிரமாதம் என்ற கணவனை இவ்வளவு தற்பெருமை கூடாது என அதட்டினாள் மனைவி. இது ஒரு ரகம்.

மனைவியிடம் கணவன் கூறுகிறான் இன்றைக்கு நீ செய்த இனிப்பு ரசம் அருமை என. அதற்கு மனைவி கூறுகிறார் என்னங்க அது பாயாசம்ங்க என. இது இன்னொரு ரகம்.

இவ்வாறு அருமை என்பதற்குள் பல ரகங்கள் அடங்கும். அதுசரி இதில் நீங்கள் எந்த ரகம்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

| | | |
|---|---|---|
| படம் | : | சரஸ்வதிசபதம் |
| இயற்றியவர் | : | கண்ணதாசன் |
| இசை | : | கே.வி.மஹாதேவன் |
| பாடியவர் | : | டி.எம்.சௌந்தரராஜன் |



கல்வியா செல்வமா வீரமா
அன்னையா தந்தையா தெய்வமா
கல்வியா செல்வமா வீரமா
அன்னையா தந்தையா தெய்வமா

ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா
இதில் உயர்வென்றும் தாழ்வென்றும் பிரிவாகுமா
ஒன்றில்லாமல் மற்றொன்று உருவாகுமா
இதில் உயர்வென்றும் தாழ்வென்றும் பிரிவாகுமா

கல்வியா செல்வமா....

கற்றோர்க்கு பொருள் இன்றி பசி தீருமா
கற்றோர்க்கு பொருள் இன்றி பசி தீருமா
பொருள் பெற்றோர்க்கு அறிவின்றி புகழ் சேருமா
கற்றோர்க்கு பொருள் இன்றி பசி தீருமா பொருள்
பெற்றோர்க்கு அறிவின்றி புகழ் சேருமா

கற்றாலும் பெற்றாலும் பலம் ஆகுமா
கற்றாலும் பெற்றாலும் பலம் ஆகுமா
வீரம் காணாத வாள் என்றும் வாழ்வாகுமா
வீரம் காணாத வாள் என்றும் வாழ்வாகுமா

கல்வியா செல்வமா....

படித்தவன் கருத்தெல்லாம் சபை
ஏறுமா பணம் படைத்தவன்
கருத்தானால் சபை மீறுமா
படித்தவன் கருத்தெல்லாம்
சபை ஏறுமா பணம் படைத்தவன்
கருத்தானால் சபை மீறுமா

படித்தவன் படைத்தவன் யாராயினும்
படித்தவன் படைத்தவன் யாராயினும் பலம்
படைத்திருந்தால் அவனுக்கிணையாகுமா
பலம் படைத்திருந்தால் அவனுக்கிணையாகுமா

கல்வியா செல்வமா....

ஒன்றுக்குள் ஒன்றாக கருவானது
அது ஒன்றினில் ஒன்றாக பொருளானது
ஒன்றுக்குள் ஒன்றாக கருவானது
அது ஒன்றினில் ஒன்றாக பொருளானது

ஒன்றை ஒன்று பகைத்தால் உயர்வேது
ஒன்றை ஒன்று பகைத்தால்
உயர்வேது மூன்றும் ஓரிடத்தில்
இருந்தால் நிகரயேது மூன்றும்
ஓரிடத்தில் இருந்தால் நிகரயேது

கல்வியா செல்வமா....

மூன்று தலை முறைக்கும் நிதி வேண்டுமா
காலம் முற்றும் புகழ் வளர்க்கும்
மதி வேண்டுமா மூன்று தலை
முறைக்கும் நிதி வேண்டுமா
காலம் முற்றும் புகழ் வளர்க்கும்
மதி வேண்டுமா

தூங்கும் பகை நடுங்கும் பலம் வேண்டுமா
தூங்கும் பகை நடுங்கும் பலம்
வேண்டுமா இவை மூன்றும்
துணை நிற்கும் நலம் வேண்டுமா
இவை மூன்றும் துணை நிற்கும்
நலம் வேண்டுமா

கல்வியா செல்வமா...

# ஓசோனை ஓட்டையாக்கும் சீனா

செப்டம்பர்-16.. அன்று உலக ஓசோன் தினம் என்று, ஐ.நா சபையால் அறிவிக்கப்பட்ட தினம். இந்நாள் வெறுமனே வலைப் பேச்சுகளிலும், பக்கம் பக்கமாக கட்டுரைகளிலும் 'விழிப்புணர்வு ஏற்படுத்துகிறேன்' என்ற போர்வையின் கீழ் வெறும் எண்ணாக மட்டுமே ஒளிந்திருக்கிறதே தவிர நடைமுறையில், இதுவும் பிற நாட்களைப் போல் எளிதில் கடந்து விடக்கூடிய ஒன்றாகவே இருக்கிறது.

ஓசோன் படலத்தின் பயன் அனைவரும் அறிந்ததே. சூரியனிலிருந்து வரும் புறஊதாக் கதிர்களை வடிகட்டி பூமிக்கு அனுப்பும் பணியினைச் செய்கிறது. கடந்த சில மாதங்களாக ஐரோப்பிய நாடுகளில், குறிப்பாக இங்கிலாந்தில், 40 முதல் 43 டிகிரி செல்சியஸ் வரை வெப்பம் பதிவாகியுள்ளது.

இது குறித்து எழுத்தாளரும் சூழல் ஆர்வலருமான அ.முத்துகிருஷ்ணனிடம் பேசிய போது,

"மனிதர்களின் நடத்தையால் தான் ஓசோன் படலத்தில் ஓட்டை விழுகிறது. தொடர்ந்து வளர்ச்சி என்கிற பெயரில் நாம் வெளியிட்டுள்ள வாயுக்கள் நம்முடைய பொறுப்பற்றத்தனத்தையே காட்டுகிறது.

துரித வளர்ச்சி தான் நம்மை இந்த நிலைக்கு கொண்டு வந்து நிறுத்தியுள்ளது. இன்று நாம் சந்திக்கும் பருவநிலை மாற்றம் என்பது நம்முடைய தொழிற்சாலைகளின் கழிவுகளாலும், காடுகளை கட்டுபாடுகளின்றி அழித்ததாலும் ஏற்படும் விளைவுகளே..

ஓசோன் படலத்தைப் பாதுகாப்பதற்கான வியன்னா ஒப்பந்தம், மான்ட்ரியல் நெறிமுறைகள் என பல விஷயங்களை தொடர்ந்து உலக நாடுகள் பேசினாலும் அதனை அமுல்படுத்துவதில் வளர்ந்த நாடுகள் நடைமுறைகளை கடைப்பிடிப்பதில்லை. மாறாக வளர்ந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளுடன் கரியமில பேரத்தில் ஈடுபட்டு வருவது வேதனையான விடயம்.

அதே நேரத்தில் வளந்த நாடுகள் பெரும் தொழிற்சாலைகளை தங்கள் நிலத்தில் மூடிவிட்டு அவைகளை மூன்றாம் உலக நாடுகளில் திறப்பதும் தீர்வின் ஒரு பகுதியாக அல்லாமல். பிரச்சினையை மடைமாற்றும் ஒரு உத்தியாகவே உள்ளது" என்று அவர் கூறினார்.

இதே நிலை தொடருமாயின், இங்கிலாந்தின் வரிசையில் இந்தியாவும் விரைவில் இடம்பெறும். அதிக வெப்பம் மட்டுமின்றி, இன்ன பிற



இயற்கை சார்ந்த இன்னல்களையும் எதிர்கொள்ள நேரிடும்!

இதற்கான தீர்வு , வாகன பயன்பாட்டைக் குறைப்பது, கரியமில வாயுவை வெளியிடும் சாதனங்களைக் குறைத்துக் கொள்வது, மரங்களை அதிளவு வளர்ப்பது என எல்லாருக்கும் தெரிந்த ஒன்று தான்.

ஆனால்இது போன்ற கட்டுரைகளில் படிப்பது, ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதோடு கடந்து போய் விடாமல் களத்தில் நடைமுறைப்படுத்துவதே மனிதர்களாகிய நமது கடமையாக இருத்தல் வேண்டும்" என்றார்.

இதேவேளை வளிமண்டலத்தில் சமீபகாலமாக அதிகரித்து வந்த ஓசோன் படலத்தைச் சிதைக்கும் வாயுவின் வெளியீட்டுக்கு யார் காரணம் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

சீனாவின் கிழக்குப் பகுதியில் அமைந்திருக்கும் தொழிற்சாலைகள் தான் அதற்குக் காரணம் என்று நேச்சர் அறிவியல் இதழில் வெளியான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டுக்குப் பிறகு மட்டும் இந்தப் பகுதியில் இருந்து ஒவ்வொரு வருடமும் 7000 தொன்களுக்கு மேல் CFC-11 வாயு வளிமண்டலத்தில் கலந்திருக்கிறது. விலை குறைவு என்பதால் வீட்டில் இன்சுலேஷன் செய்வதற்கும் குளிர்பதன சாதனங்களில் பயன்படுத்தப்படும் நுரைப் பொருள்களை உருவாக்கவும் CFC-11 வாயுவை அந்தத் தொழிற்சாலைகள் பயன்படுத்தியிருக்கின்றன.

இதன்மூலமாக மாண்ட்ரியல் ஒப்பந்தத்தை மீறியிருக்கும் சீனா, உலக நாடுகளையும் ஏமாற்றியிருப்பது தற்போது தெரிய வந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்ந்தது ஒரு முறை புதைக்கப்பட்டது இருமுறை!

## மோதிரமும் கல்லறைத் திருடர்களும்!

சரித்திரம் என்பது எப்போதுமே பல மர்மங்களை உள்ளடக்கியதாகத்தான் இருந்துவந்திருக்கிறது. சில சரித்திர ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ளும் தகவல்கள் நம்புவதற்குக் கடினமானவை. அதுவும் செவிவழிச் செய்திகள் இவற்றுடன் கலந்து நம்மை அடையும்போது நம்பகத்தன்மை மேலும் கொஞ்சம் குறையும். அதேசமயம் பொய்கள் என்று ஒதுக்க முடியாத அளவுக்கு அவற்றில் பல்வேறு கோணங்கள் இருக்கும். அப்படிப்பட்ட சுவாரஸ்யமான அதிசயங்களையும் மர்மங்களையும் விநோதங்களையும் இந்தத் தொடர் விவரிக்கிறது.

17 ஆம் நூற்றாண்டின் இறுதியில் நடந்ததாகச் சொல்லப்படுகிற கதை இது. அயர்லாந்தைச் சேர்ந்த பெண்மணி மார்க்கோரி மெக்கால். ஒரு மருத்துவரைத் திருமணம் செய்தவர். அவர்களின் வாழ்க்கை இனிமையாகத்தான் சென்று கொண்டிருந்தது. ஆனால் 1705 இல் ஒருவித தொற்று நோயினால் மார்க்கோரி பாதிக்கப்பட்டார். தன் மனைவி உடல் நலமில்லாமல் படுத்த படுக்கையான போது கணவன் பக்கத்திலிருந்து அவரை கவனித்துக் கொண்டார்.

ஒரு கட்டத்தில் மார்க்கோரியின் உடல் இயக்கத்தை நிறுத்திக் கொண்டது. அவரது உடலை அதற்கு மேல் வைத்திருப்பது ஆபத்து என்று அந்த ஊரைச் சேர்ந்தவர்கள் கருதினார்கள். காரணம் அவரை பாதித்த தொற்றுநோய் பிறருக்கும் வந்து விடக்கூடாதே என்கிற தவிப்பு. எனவே அவரை அவசரம் அவசரமாக இடுகாட்டில் புதைத்தார்கள்.

இறந்தவரின் கையில் ஒரு மோதிரம் இருந்தது. புதைப்பதற்கு முன் என்ன முயன்றும் அவர் கணவரால் அந்த மோதிரத்தைக் கழற்ற முடியவில்லை. அவரது அந்த விரல் வீங்கியிருந்தது தான் அதற்குக் காரணம். அந்த மோதிரம் போனால் போகிறது என்று கணவர் விட்டுவிட்டார். சுற்றியிருந்தவர்கள் தொற்று நோய் பயம் காரணமாக மார்க்கோரியை விரைவில் புதைக்க வேண்டும் என்று அவசரம் காட்டியதும் மற்றொரு காரணம். மார்க்கோரியின் உடல் அன்று மாலை புதைக்கப்பட்டது. அப்போது அந்த நாடு வறுமையின் பிடியில் சிக்கி இருந்தது கல்லறைகளைத் தோண்டி உள்ளே இருக்கும் உடலில் ஏதாவது நகை மிச்சம் இருந்தால் அவற்றையும் எடுத்துச் செல்லும் கல்லறைத் திருடர்கள் (Grave Robbers) அங்கு அதிகமாக இருந்தார்கள்.

அப்போது எல்லாம் புதைக்கப்பட்ட பிணத்தை தங்கள் ஆராய்ச்சிகளுக்கு அளித்தால் கணிசமான பணம் தருவதற்குத் தயாராக இருந்தார்கள் சில மருத்துவ விஞ்ஞானிகள். அதுவும் இந்தக் கல்லறைத் திருட்டுகள் அதிகரிக்க ஒரு காரணம்.

மார்க்கோரி புதைக்கப்பட்ட ஓரிரு மணி நேரத்தில் அங்கு சில திருடர்கள் வந்தார்கள். அந்தக் கல்லறை பகுதியைத் தோண்டினார்கள். கல்லறையில் இருந்து பெட்டியை வெளியே எடுத்தார்கள். அதன் மூடியைத் திறந்தார்கள்.

> “மார்க்கோரி புதைக்கப்பட்ட ஓரிரு மணி நேரத்தில் அங்கு சில திருடர்கள் வந்தார்கள். அந்தக் கல்லறை பகுதியைத் தோண்டினார்கள். கல்லறைப் பெட்டியை வெளியே எடுத்தார்கள். அதன் மூடியைத் திறந்தார்கள். உள்ளே இருந்த பெண்மணியின் கைவிரலில் கம்பீரமாகக் காட்சியளித்தது அந்த மோதிரம். அதை நீக்க முயற்சி செய்தார்கள்.”




உள்ளே இருந்த பெண்மணியின் கைவிரலில் கம்பீரமாகக் காட்சியளித்தது அந்த மோதிரம். அதை நீக்க முயற்சி செய்தார்கள். ஆனால் மோதிரம் கையை விட்டு வரவேயில்லை. யாராவது வந்து விடுவார்களோ என்ற பயம் வேறு சூழ்ந்துகொள்ள திருடர்கள் சட்டென்று அந்த விரலை அறுத்தார்கள். அப்போதுதான் அவர்கள் அதிர்ச்சியின் உச்சத்திற்குச் செல்லும்படி ஆனது.

அந்தப் பெண்மணி உண்மையில் இறந்து விடவில்லை. கோமா எனப்படும் ஆழ்நிலை மயக்கத்திலிருந்திருந்தார். இப்போது அவருக்கு முழிப்பு வந்துவிட்டது. திருடர்களைப் பார்த்து அவர் அலறினார். திருடர்களோ அவரைவிடப் பெரிதாக அலறியபடி அங்கிருந்து ஓட்டம் பிடித்தார்கள்.

கஷ்டப்பட்டு மார்க்கோரி மேலே வந்து தன் வீட்டை அடைந்தார். உள்ளே அவரது கணவர் டாக்டர் ஜான் தன் குழந்தைகளுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். மார்க்கோரி வீட்டுக் கதவை மூன்று முறை குறிப்பிட்ட இடைவெளிகளில் தட்டினார். அதுதான் அவர் பாணி.

உள்ளே அவர் கணவர் பெருமூச்செறிந்தார். “உங்கள் அம்மா மட்டும் உயிரோடு இருந்தால் அவள் கதவைத் தட்டுவது இதே போலத்தான் இருக்கும்” என்றபடி வந்தது யார் என்பதைக் காணக் கதவைத் திறந்தார். யாராவது துக்கம் விசாரிக்க வந்திருப்பார்கள் என்பது அவரது எண்ணம்.

அங்கே மார்க்கோரி நின்று கொண்டிருந்தார். புதைக்கும் போது அணிவிக்கப்பட்டிருந்த அதே ஆடைகளுடன் காட்சி அளித்தார். அவரது ஒரு விரலிலிருந்து மட்டும் இரத்தம் கொட்டிக் கொண்டே இருந்தது. இதைப் பார்த்ததும் அவர் கணவர் மயக்கம் போட்டு விழுந்தார்.

மருத்துவமனையில் அவர் இறந்து விட்டதாக அறிவித்துவிட்டார்கள். அவர் இறந்ததை உறுதிப்படுத்திக்கொண்டு மார்க்கோரி புதைக்கப்பட்டிருந்த அதே பகுதியில் இவரைப் புதைத்தார்கள் காலப் போக்கில் மார்க்கோரி மறுமணம் செய்து கொண்டாள். பல குழந்தைகளுக்குத் தாய் ஆனாள். பின்னர் ஒரு கட்டத்தில் இறந்தாள். அயர்லாந்தின் லூர்கன் என்ற பகுதியிலிருந்த, முன்பு அவர் புதைக்கப்பட்ட அதே இடுகாட்டில் இம்முறை புதைக்கப்பட்டார் (இந்த முறை அவர் நிஜமாகவே இறந்திருந்தார்!). அவரது கல்லறை வாசகம் இப்படி இருந்தது. 'வாழ்ந்தது ஒரு முறை, புதைக்கப்பட்டது இருமுறை'. (Lived once, buried twice).

ஒருவரது இறந்த நிமிடத்திலிருந்து புதைக்கப்படும் வரை அனைத்து செயல்முறைகளையும் செய்யப்படுவதை மேற்பார்வை இடுபவரை ஃப்யூனரல் டைரக்டர் என்று அந்த நாட்டில் குறிப்பிடுவார்கள். அந்த வேலையைப் பலகாலம் செய்து கொண்டு வந்திருந்த ஒருவர் தன் சுயசரிதையை 'கன்பஷன்ஸ் ஆஃப் எ ஃப்யூனெரல் டைரக்டர்' என்ற பெயரில் வெளியிட்டார். அதில்தான் மேற்படி நிகழ்வு குறிப்பிடப்பட்டுள்ளது என்பதுடன் மேலே குறிப்பிட்ட வாசகங்களுடன் ஒரு கல்லறையும் காணப்படுகிறது.

(மர்மம் தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துணிந்தால் வெற்றி



எதற்கும் அஞ்சிடாதே தோழா-
எடுத்துவிடு உன் மனத்திலுள்ளதை
பயந்து ஒதுங்காதே எடுத்தியம்பு
உள்ளத்துள் மறைந்து கிடப்பதை?
கயவன் காலால் உதைப்பான் என
காரியத்தை மறந்திடாதே
காலம் பல கடந்தும் கண்கண்ட
காட்சிகளை கச்சிதமாய்
சொல்லிவிடு கடமை
ஒன்றுண்டு - அதுவே
எப்போதும் தவறாதிருக்கும்
துணிந்தால் வெற்றியுண்டு
தூரமில்லை பதில் கிட்டவுண்டு.

கணபதிதாசன், தருமபுரம்.

## குன்றெறி தீபமாய் நின்றெரிந்தவன்

எப்படி உனை மறப்பது அண்ணனே
எங்கள் தேசத்தில் தியாகத்தின் மன்னனே
ஒப்பு உவமைகள் சொல்லவே ஒண்ணாத
அகிம்சையாய் இருந்தது உந்தனின் வாழ்வது
தப்புச் செய்தது பாரதம் என்றதைத்
தரணிக்கு உணர்த்தியது உந்தனின் சாவது
நல்லை மேடையில் நீ அமர்ந்ததைப்
பள்ளி நாளினில் பார்த்திருக்கிறோம்
மெய்யினைத் தினம் நீ உருக்கிட
மெய்யரும்பியே வேர்த்திருக்கிறோம்
ஐயனே நீ மீளுவாய் என - அன்று
வடதிசை பார்த்திருக்கிறோம்
உய்ய ஒரு வழி கிடைக்குமா என்று
இன்னும் நாம் இங்கு காத்திருக்கிறோம்
குன்றெறி தீபமாய்க் குவலயம் தன்னிலே
நின்றெரிந்தவன் நெருப்பினை ஒத்தவன்
கன்றது தாயினை பிரிந்தது போலவே
என்றுமே எங்களை கதறிட வைத்தவன்
சென்றுளான் இனித் திரும்பிடாப் பாதையில்
வென்றுளான் எம் இதயங்கள் தன்னையே



தி.சாந்தகுமார்.

## வாழும் வழி பற்றிடுவோம்



துள்ளித் திரியும் துடுக்கு மிகு
மகிழ் இளமை உள்ளங்கள்
எங்கே செல்கிறது இவர் வாழ்க்கை?
அணை இல்லாக் காட்டாறாய்
நாசம் செய்கிறதே நாட்டில்
காட்டாற்றை அணையிட்டு
முறைப்படுத்தினால்
பயன்கள் உச்சமாயிருக்கும்
வாலிபப் பருவமென்பதும்
பாய்ந்து வரும் வெள்ளம் போன்றதே
அனுபவ முதிர்வின் அறிவுரைக்கும்
அறிவியலாளரின் தெளிவூட்டலுக்கும்
செவிசாய்த்து அவர்கட்கடங்கி
இளையோர் ஒழுகி வாழ்ந்தால்
நல்லதோர் ஆரோக்கிய சமுதாயமாக...
இன்றிங்கு யுவப்பருவத்தின் வாழ்வு
போதைப்பொருளிற்கும்
மதுபானத்துக்கும் அடிமையாகி
கொலை, கொள்ளை, காமச் சீரழிவு,
தெருச்சண்டை, பழிக்குப் பழியென
அத்தனை பிற்போக்குத்தனங்களிலும்
ஆட்டம் போடுகின்றதே

சி.இ.அன்புதுரை,
சம்மட்டியோலை, மானிப்பாய்.

## மௌனத்தின் தேடல்- 577



## அடக்குமுறை

மக்கள் கூட்டம் வீதி எங்கும்
விண் அதிர உரிமை கோசம்
களேபரம், கைது, கண்ணீர்ப்புகை
இக்கொடுமைகள் மத்தியிலும்
உரிமைகள் காக்க நெஞ்சுரம்
கொண்ட மக்கள் வேலியும்
பயினரா மேயுதோ நீதியின்
குரல்களை அடக்கும்
அதிகாரத்தின் நிலை
இதுதானோ

கும்பவாழியான்,
உடுப்பிட்டி.

## இனியொரு...

உயிர் வாழ உலகம் ஒன்றே
உயிர் மூச்சுக் காற்றும் ஒன்றே
உயிர் காக்க நீரும் ஒன்றே
உயிர் வாழும் உரிமை
எல்லோருக்குமாமே
எவர் அடக்குமுறை இனியும் தாங்கா
எதிர்த்துத்தான் போராடி வெல்வோம்
என்றே கங்கணம் கட்டி வாழும்
இனியொரு புத்துலகு படைப்போமாக

சாமிபுத்திரன்,
சரவணை.

## பதிந்தே இருக்கிறதே

துப்பாக்கிக் குண்டு
விளையாட்டுப் பந்து
சிறைச்சாலை பூஞ்சோலை
எனும் வார்த்தை இனும்
பசுமரத் தாணியாகப்
பதிந்தே இருக்கிறதே!
இன்றும் வீழ்த்தப்பட்டவரல்ல
விதைக்கப்பட்டவர் எனும்
பாடம் கற்றுத் தந்தாலும்
அடக்குமுறையாளருக்கு
அணுவளவும் சிரசுக்கே
ஏறவில்லை இனியொரு
புரட்சி செய்வோம்.

வாகைவளவன், நல்லூர்.

## வளமாக்கும் வரை

உணவு, எரிபொருள்,
மருந்து வேண்டி
வறிய நாடுகளும் வளர்முக
நாடுகளும் வல்லாதிக்க நாடுகளின்
வலையில் சிக்கி
நாள்தோறும் நசிந்து வருகின்றன.
இதைக் கைகளால் தூக்கி
நிறுத்தும் முயற்சி
வெற்றி அடையப் போவது இல்லை.
எங்கள் நாட்டை நாங்களே
வளமாக்கும் வரை

பி.யதுர்சன்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

## மௌனத்தின் தேடல்- 578



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை. வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

## நாளை நம் விருட்சம்

நாணலாய் இருப்பதாக
நினைத்து நசுக்காதே
நாளை நாம் விருட்சமாவோம்
அதிலே தொங்கும்
உன் உடல்.

பி.மதுஷ்சன்,
கொக்குவில்.

## தமிழர்கள்தான்

நிச்சயமாக இவர்கள் தமிழர்கள் தான்
நொருங்கி நசியும் வரை
இப்படியே நிற்பார்கள்.

பிரகவி, தையிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கடல் புறா

காலத்தின் பதிவு 34

## நடனமாடினாள்!

கைகளிரண்டிலும் கல் வளையல்கள் பல மின்னிக் கொண்டிருந்தன. அவள் அணிந்திருந்த ஆபரணங்களும் சரி, ஆடைகளும் சரி அவள் ஒவ்வோர் அழகையும் பூர்ணமாக எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன. அவள் கழுத்தில் அணிந்திருந்த நவரத்தின மாலையொன்று நீளமாக மார்பில் தொங்கி அவள் அசைய அசைய ஆசையுடன் அப்படியும் இப்படியும் அடையாளம் காட்டிக் காட்டி அசைந்தது. ஆடவர் மதிமயங்க, பெண்டிர் பொறாமை கொள்ள வைத்தது.

அவள் பாதங்கள் மண்டப மேடையில் மெள்ள மெள்ள அசைந்தன. விரல்கள் எழுந்து எழுந்து கீழ்ப் பலகையை மெல்ல மெல்லத் தட்டின. ஜதியின் அந்த அசைவில் அவள் பாதத்தின்மீது தீட்டப்பட்டிருந்த செம்பஞ்சுக் குழம்புகூட அசைவதாகத் தோன்றியது. இளையபல்லவனுக்கு. எழுந்து எழுந்து தாழ்ந்த பாதங்கள் சட்டென்று ஒரு புறம் வளைந்தன.

கணுக்கால் பட்டடென்று திரும்ப மேலிருந்த ஆடுசதைகள் அசைந்தன. மஞ்சளோடிய வழவழத்த அந்த ஆடுசதைகளின் மீது பின்னாலிருந்து பாய்ந்த சந்திரனின் வெண்மைக் கிரணங்கள், அவற்றுக்கு மஞ்சளோ வெளுப்போ இல்லாத ஏதோ ஒரு மோகனப் புது நிறத்தை அளித்துவிட்டதாகத் தோன்றியது இளையபல்லவனுக்கு. அந்தக் கால்களிலிருந்து கண்ணை மேலுக்கு உயர்த்தக்கூட சக்தி இல்லாமல் அவன் உட்கார்ந்திருந்தான். அவள் அசைவுகள் மேலே ஏற ஏறத்தான் அவன் கண்களும் உயர்ந்தன.

முதன்முதலில் தலைவணங்கிப் பாதங்களை மட்டும் தட்டி நடனத்தைத் துவங்கிய மஞ்சளழகி மெல்ல மெல்ல அசைவுகளை மேலுக்குக் கொண்டு சென்றாள். கணுக்காலும் கணுக்காலுக்குப் பிறகு பாவாடைக்குக் கீழே தெரிந்த ஆடுதசையும் அசைந்த அதே நேரத்தில் வணங்கிய தலையுடன் மெள்ளத் தன் சிற்றிடையை வளைத்தாள். அவள் இடை அசைந்தது. அதை அடுத்து அவ்ள் உடலின் ஒவ்வொரு பாகமும் அசையத் தொடங்கியது. நீண்ட காலசாபத்தின் வசப்பட்டுக் கல்லாகிக் கிடந்த தேவலோக ரம்பை திடீரென சாபம் நீங்கி முழுத்துடிப்புடன் எழுவது போல மஞ்சளழகி தலையை நிமிர்ந்து எழுந்தாள்.

அவள் உடல் பூராகவும் நடனக் கலையால் புதுமையான உயிர்த்துடிப்பைப் பெற்றதுபோல் உணர்ச்சி வேகத்தில் அசைந்தது. அழகுகளின் திண்மையும் மென்மையும் மஞ்சளோடிய வெண்மையுங்கூட ஓரளவு புலப்பட்டன.

கலையெனும் உயிர் அவள் உடலில் ஊடுருவி வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்தது. அந்த வேகத்தில் அவள் அங்கங்கள் துரிதமாக பாவங்களை ஓட்டிச் சுழன்றன, சிமிட்டின, வெட்கப்பட்டன, வருத்தப்பட்டன. புருவங்கள் நிமிர்ந்தன, தாழ்ந்தன, சுருங்கின, விரிந்த, தலை ஒருபுறம் சாய்ந்தது பிறகு நிமிர்ந்தது. இடை திடீரெனத் துவண்டது, திடீரென நிமிர்ந்தது.

நவ ரஸங்களும் அந்த ஆரம்ப ஜதியிலேயே தாண்டவமாடத் துவங்கின. மெள்ள ஆரம்பித்த ஜதிகள் தாளங்களில் காலப் பிரமாணம் மாற மாற அதிக வேகம் பெற்றன. வேகம் பெறப் பெற அவள் அழகிய உடல் வேகம் பெற்றது.

ஆட்டத்தில் எழில்கள் துடித்தன. துடித்தது அவள் எழில் மட்டுமல்ல, பார்த்துக் கொண்டிருந்தவர்களின் இதயங்களுந்தான்.


(தொடரும்)

# உலகின் தொழில்திறன் அதிசயங்கள் பகுதி -3

உலகின் குறிப்பிடத்தக்க இரண்டு செயற்கை கால்வாய்களில் ஒன்று பனாமா கால்வாய்; மற்றொன்று சூயஸ் கால்வாய். சூயஸ் கால்வாய் என்பது மத்தியத் தரைக்கடலையும் செங்கடலையும் இணைக்கும் வகையில் வெட்டப்படும். 1869 ஆம் ஆண்டு திறக்கப்பட்டது.

ஐரோப்பாவிலிருந்து தெற்காசிய நாடுகளுக்கு வணிகம் மற்றும் சுற்றுலா காரணங்களுக்காக பிரயாணம் செய்பவர்கள் அநாவசியமாக ஆப்பிரிக்காவைச்சுற்றி வரவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்க்க வெட்டப்பட்டதுதான் சூயஸ் கால்வாய். இதன் காரணமாக 7000 கி.மீ தூரம் பயணப்படவேண்டிய சூழல் தவிர்க்கப்பட்டது.

இதைப்போலவே அட்லாண்டிக் கடலையும் பசிஃபிக் கடலையும் இணைக்க ஒரு கால்வாயை வெட்டுவதன் மூலம் தென்னமெரிக்காவின் தெற்கு முனை வரை பயணிப்பதைத் தவிர்க்க உருவாக்கப்பட்ட செயற்கைக் கால்வாய் தான் பனாமா கால்வாய். இதன்மூலம் தூரம் குறைக்கப்பட்டது மட்டுமல்ல. கேப் ஹார்ன் என்னும் அபாயகரமான கடல்பகுதியை கடக்க வேண்டிய அச்சத்திலிருந்தும் பயணிகள் விடுபட்டனர்.



பனாமா கால்வாய்க்கான ஆரம்ப விதை 1534 ஆம் ஆண்டு ஸ்பெயினை ஆண்ட புனித பேரரசர் ஐந்தாம் சார்லஸ் காலத்திலேயே விழுந்தது. அவரது படை வீரர்கள் ஸ்பெயினிலிருந்து பெருவுக்கு பயணிக்க சுலபமான நீர் வழிப் பாதையை உருவாக்க அவரது காலத்தின் போதுதான் ஒரு குழுவை அமைத்து அளவீடு பணிகளில் ஈடுபடுத்தினார்.

ஆனால் அத்திட்டம் அப்பொழுது தொடங்கப்படவில்லை. ஸ்கொட்லாந்து பேரரசு 1698 ஆம் ஆண்டு மேற்கண்ட இரண்டு சமுத்திரங்களையும் வேறு ஒரு வழியில் இணைக்க முடியுமா என முயற்சித்து 1700 ஆம் ஆண்டு கைவிட்டது. பின்னர் அமெரிக்காவின் ஜனாதிபதி தாமஸ் ஜெஃபர்சன் 1788 ஆம் வருடம் இதற்கான வரைபடம் ஒன்றை அலசாண்ட்ரோ மாலஸ்பினோ என்பவரை உருவாக்கும்படி பணித்தார்.

ஆனால் இந்தத் திட்டமும் கைகூடவில்லை. 1843 ஆம் ஆண்டு இப்படி ஒரு கால்வாயை நிர்மாணிப்பது பிரிட்டிஸ் சாம்ராஜ்யத்தால் மட்டுமே முடியும் என்றும் அதற்கான தகுதியும் திறனும் இங்கிலாந்துக்கு மட்டுமே உண்டு என்னும் ரீதியில் ஓர் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டதாகவும் ஆனால் அது சத்தம் போடாமல் இரகசியமாக வைக்கப்பட்டதாகவும் ஒரு உறுதிப்படுத்தப் படாத தகவல் உண்டு.

1849 இல் கலிபோர்னியாவில் தங்கம் கண்டுபிடிக்கப்பட்ட போது வணிகத் தேவைக் கருதி பனாமா றெயில் பாதை 1855 இல் அமைக்கப்பட்டது.

ஆனாலும் அது சிறு வணிகர்களுக்கு பயன்பட்டதே தவிர மிகப்பெரிய தொழில் இயந்திரங்கள், தளபாடங்கள் செல்ல கப்பல் செல்லுமளவு அகலமான கால்வாயை வெட்ட வேண்டிய அவசியத்தை குறைக்க முடியவில்லை.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

## சுகமான விடியல்

310

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# பாவம் பனை மரங்கள்

எமது கலாசாரத்தின் அடையாளமாக வரட்சியை தாங்கும் தூணாக கற்பகதருவாக சித்தரிக்கப்படும் பனை மரங்கள் பாவம். எமது மத்தியில் தோன்றியதால் பல கஷ்டங்களையும் அவமதிப்புக்களையும் தாங்கி நிற்க வேண்டிய நிலை காணப்படுகிறது.

இதே பனை மரங்கள் அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகளிலே செழித்து வளரக் கூடியனவாக இருந்திருந்தால் பனம்பழங்கள் ஒவ்வொன்றும் ஈய உறைகளிலே சுற்றப்பட்டு அதன்மேல் ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டு பாரிய விளம்பரங்களுடன் இங்கு இறக்குமதியாகி வந்திருக்கும்.


இலகுவில் ஏமாறக்கூடிய மனம் படைத்த நாமும் பணத்தை வாரி இறைத்து அவற்றை வாங்கி உண்டிருப்போம். இதே பனைமரங்கள் அமெரிக்க தேசத்திலே வளருபவையாக இருந்திருந்தால் பனங்கிழங்குகளின் மருத்துவக் குணங்களை உலகறிந்திருக்கும்.

கருப்பட்டிகள் அருமருந்தாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும். நுங்குகளின் மகத்துவம் பேசப்பட்டிருக்கும். ஒடியல், புழுக்கொடியல், மாவகைகள் உலக சந்தையிலே பெரும் இடத்தைப் பிடித்திருக்கும். பனையின் ஒவ்வொரு பகுதிகளும் உலகின் உபயோகத்திற்கு வந்திருக்கும்.

ஆனால் பாவம் இந்தப் பனை மரங்கள் பாவப்பட்ட எம் மக்கள் மத்தியிலே தோன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.

பானங்களிலே அதிகூடிய புரதச்செறிவுடைய பானம் நுங்கு என்பது நம்மில் பலருக்கு தெரியாது. பால் தான் புரதச் செறிவுடைய பானம் என்று நினைத்துக் கொள்கிறோம். 100g பாலிலே 3.3g புரதம் இருக்கிறது. ஆனால் 100g நுங்கிலே 10.8g புரதம் இருக்கிறது. பாலினைப்போல் 3 மடங்கு புரதச் செறிவுள்ள பானம் நுங்கு என்பதை மனதில் நிறுத்துவோம்.

நுங்கினுடைய உலர்நிறையிலே 60% புரதமும் 30% மாப்பொருளும் இருப்பதுடன் மிகக் குறைந்தளவு கொழுப்பே இதனில் காணப்படுகிறது. பனங்கூடல்களுக்குள் வசிக்கும் எமது சிறார்கள் புரதக் குறைபாட்டினால் அவதியுறுகின்றனர். ஆனால் அவர்களுக்கு இந்த நுங்கின்



மகத்துவம் சொல்லிக் கொடுக்கப்படுவதில்லை.

எம் மத்தியிலே ஒரு கோடிக்கும் அதிகமான பனைகள் இருந்தும் அவற்றில் இருந்து கிடைக்கும் பனம்பழங்களில் 5 வீதமான பனம்பழங்கள் கூட உபயோகப்படுத்தப்படுவதில்லை. வண்டுகளிடமிருந்தும் புழுக்களிடமிருந்தும் அவற்றை முற்றாகக் காப்பாற்றி அனைத்துப் பழங்களையும் முழுமையாகப் பயன்படுத்துவது எப்படி என்பது சம்பந்தமான வழிமுறைகளை நாம் ஆராயவில்லை.

புரதச்சத்தது நிறைந்த விற்றமின்கள், கனியுப்புக்கள் நிறைந்த எமது அரும் சொத்தான பனம் பழங்கள் வீணடிக்கப்பட்டு மண்ணுக்கு உரமாகிக் கொண்டிருக்கின்றன.

. பனம்பழங்களின் உலர் நிறையில் 11 வீதம் புரதமும் பெருமளவு பீட்டா (ß) கரோட்டினும் ஏனைய விற்றமின்களும் இரும்பு, கல்சியம் போன்ற கனியுப்புக்களும் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்தப் பனம்பழங்களை மக்கள் விரும்பி உண்ணக்கூடிய வகையில் எவ்வாறு மாற்றங்கள் செய்வது என்பது சம்பந்தமான பல ஆய்வுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். சோடாவுக்கு மாற்றீடாக பனம் பழங்களிலிருந்து பலவகையான சுவையான பானங்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டும். இடியப்பத்தினுள்ளும் பிட்டினுள்ளும் பனங்களி சேர்த்து சமைப்பதன் மூலம் அவற்றின் சுவையும் நிறமும் ஊட்டச்சத்தும் மெருகு பெறும் என்பது சொல்லிக் கொடுக்கப்பட வேண்டும். பனங்களிகளை இலகுவில் பிரித்தெடுப்பது பாதுகாக்கும் பொறிமுறைகள் கண்டறியப்பட வேண்டும்.

பனம்பழங்களின் மருத்துவக் குணங்களும் அதிலே காணப்படும் நோய் எதிர்ப்புத்தன்மையும் விஞ்ஞானபூர்வ ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்பட வேண்டும். இந்த முயற்சி வெற்றி அளிப்பின் நாம் பனம்பழங்களை ஈய உறைகளில் சுற்றி அவற்றில் ஸ்ரிக்கரும் ஒட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய நிலையும் ஏற்படலாம்.

பலவிதமான விளம்பர யுத்திகளுடன் இறக்குமதியாகி அதிக விலையில் விற்பனையாகும் ஓட்ஸ் வகைகள் எமது அன்றாட உணவுகளில் ஒன்றாக மாறும் நிலை காணப்படுகிறது. ஆனால் எமது சொந்த மண்ணில் விளையும் ஓட்ஸிலும் சிறந்த அதிக நார்த்தன்மை கொண்ட மலிவான இயற்கையான பனங்கிழங்குகளை நாம் புறக்கணித்து விடுகின்றோம்.

பனங்கிழங்குகள் அதிகளவு நார்த்தன்மையும் மிகக்குறைந்தளவு கொழுப்பும் கொண்டிருப்பதுடன் உலர் நிறையில் 12 வீத புரதத்தையும் பல விற்றமின்கள் கனியுப்புக்களையும் கொண்டிருக்கின்றன.

பனங்கிழங்குகளில் இருக்கும் மாப்பொருளானது குறைந்த வேகத்திலே உடலினுள் அகத்துறிஞ்சப்படுவதால் இது நீரிழிவு நிலை உள்ளவர்களுக்கும் ஒரு சிறந்த உணவாக காணப்படுகின்றது. பனம்பழங்களின் பயன்கள் அனைத்தையும் எடுத்த பின்பு அதன் கொட்டைகளை பனம்பாத்தி போடுவதன் மூலம் பனங்கிழங்குகளை பெற்றுக் கொள்ள முடியும். இதன் மூலம் பனம்பழங்களும் பனம் விதைகளும் பயனுடையவையாக மாற்றம் பெறும். அத்துடன் பனங்கிழங்குகளை பதப்படுத்தி பனங்கிழங்குகளாகவே பாதுகாக்கும் பொறிமுறை கண்டறியப்பட வேண்டும்.

Dr.சி.சிவன்சுதன்
பொது வைத்திய நிபுணர்

பலருக்கு பயன்படக்கூடிய ஆரோக்கியம் சம்பந்தமான அல்லது உளவியல் சமூக மேம்பாடு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களை (thamilhealth@gmail.com) என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். அதற்கான எமது பதில்கள் இங்கு பிரசுரிக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ஷக்களின் விருப்பங்களை நிறைவேற்றுபவரே ரணில்

## எதிர்கட்சி தலைவர் சஜித் சாடல்

**(கொழும்பு)**

**ராஜபக்ஷ அரசாங்கம் தன்னை பிரதமர் பதவிக்கு அழைத்து தனது அரசியல் வாழ்க்கையை முடிவுக்கு கொண்டு வருவதையே எதிர்பார்த்திருந்ததாகவும் இருப்பினும் அது நடக்காத காரணத்தினால் ராஜபக்ஷக்களின் விருப்பத்தை நிறைவேற்றும் ஒருவரையே தற்போது ஜனாதிபதியாக நியமித்திருக்கிறார்கள் என்றும் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில், மக்கள் எழுச்சி போராட்டத்தால் இராஜினாமா செய்ய வேண்டி ஏற்பட்ட ஜனாதிபதி, பிரதமர், நிதி அமைச்சர்களுக்குப் பதிலாக தங்கள் விருப்பத்தை நிறைவேற்றும் ஒருவரையே நாட்டின் தலைவர் பதவிக்கு நியமிக்க வேண்டிய தேவை அன்று அவர்களுக்கு ஏற்பட்டது.

இருப்பினும் அன்று தன்னை பிரதமர் பதவிக்கு அழைத்து சில நாட்களுக்குப் பிறகு நம்பிக்கையில்லாதத் தீர்மானம் கொண்டு வந்து தனது அரசியல் வாழ்க்கைக்கு முடிவுக்கு கட்டுவதையே அவர்கள் எதிர்பார்த்து இருந்தார்கள்.

இதனை புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு அரசியலில் அனுபவம் இல்லாதவர் அல்ல. இது போன்ற ஏமாற்று வித்தைகளை நம்பி ஏமாறமாட்டேன். அரசாங்கம் தொடர்ந்து செயற்பட முடியாது என்பதை நிரூபித்துள்ளது.

இவ்வாறான அரசாங்கத்திடம் தாம் ஒன்றையே கோருவதாகவும் அது தேர்தலை தவிர வேறொன்றும் இல்லை என மேலும் தெரிவித்தார். (4)

## ஈரானிடம் இருந்து உரம்

(கொழும்பு)

இலங்கைக்கு உரம் வழங்க ஈரான் அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

அண்மையில் ஈரானிய தூதுவருடனான சந்திப்பை அடுத்து விவசாய அமைச்சு ஈரானிடம் இருந்து உரத்தை பெற்றுக்கொள்ள தீர்மானித்தது.

எவ்வாறாயினும் மத்திய கிழக்கு நாடு மீது விதிக்கப்பட்டுள்ள சர்வதேச தடைகளால் ஈரானில் இருந்து உரத்தை இறக்குமதி செய்வது ஒரு பிரச்சினையாக மாறியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், தேவையான விண்ணப்பங்கள் வெளிவிவகார அமைச்சின் ஊடாக மேற்கொள்ளப்படும் என விவசாய அமைச்சர் தெரிவித்துள்ளார். (4)

## தாய்மார்களுக்கு திரிபோஷா வழங்க நடவடிக்கை

### சுகாதார அமைச்சர்

(கொழும்பு)

குழந்தைகள் மற்றும் தாய்மார்களுக்கு தொடர்ந்து திரிபோஷா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

திரிபோஷா பிரச்சினை தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்ட குழுவினர் நேற்று முன்தினம் அமைச்சரை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இதேவேளை குழந்தைகளின் போசாக்கு மட்டம் தொடர்பான இந்த உரையாடலில் மருத்துவ சங்கங்களின் மருத்துவ மற்றும் சிவில் உரிமைகள் கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சமல் சஞ்சீவ மற்றும் அரச மருத்துவ அதிகாரிகள் மன்றத்தின் ஊடக செயலாளர் நிரோஷன பிரேமரத்ன ஆகியோர் இணைந்து கொண்டனர். (4)


பால் கறக்கும் மாடுகள்

விற்பனைக்கு

Jersey/Friesian கலப்பின மாடுகள்
ஒரு புகழ்பெற்ற பால் பண்ணையில்
உடனடியாக விற்பனைக்கு உள்ளது.



அழையுங்கள்

076 917 6311 / 077 678 7484

(C-1805)



கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: சூரி 3 செவ் 4 இல்<br>உயரம்: 183 cm<br>தகைமை/தொழில்:சிற்பவேலை (சொந்தம்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/8747 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 1<br>கி.பா: 30½ சூரி 12 செவ் 1 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்:மருத்துவபீட மாணவி, தொழில் - மருத்துவர்<br>எதிர்பார்ப்பு: வைத்தியர் பொறியியலாளர்<br>தொ.இ:G/11925 |
| பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா: 56 சூரி 5 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: பாடசாலை காவலாளி<br>எதிர்பார்ப்பு:A/L படித்த பெண்<br>தொ.இ: B/10550 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: சூரி 3 செவ் 2 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: உயர்பதவி<br>தொ.இ:G/11247 |
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: சூரி, செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி தொழில் அவசியம்<br>தொ.இ: B/9476 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 2<br>கி.பா: சூரி 7 செவ் 11 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: LLB சட்டத்தரணி<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம் கனடா<br>தொ.இ:G/10863 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 4<br>கி.பா: 39 ½ சூரி 2 செவ் 3 இல்<br>உயரம்: 178 cm<br>தகைமை/தொழில்: சட்டத்தரணி, அனுமதி பெற்ற மொழிபெயர்ப்பாளர்<br>எதிர்பார்ப்பு: சட்டத்தரணி, வைத்தியர்<br>தொ.இ: B/11924 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>கி.பா: 29½ சூரி 11 செவ் 8 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: பட்டதாரி பொது முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு : பட்டதாரி, அரச உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/10685 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'எமது உறவுகள் எங்கே'
# சிறுவர்கள் நேற்று போராட்டம்

(கிளிநொச்சி)

**காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மற்றும் அவர்களது சிறுவர்கள் நேற்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். குறித்த போராட்டம் காலை 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது அலுவலகம் முன்பாக இடம்பெற்றது.**



இதன்போது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளிற்கு சர்வதேசம் நீதி வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி பதாகைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

சிறுவர் தினமான நேற்று இடம்பெற்ற போராட்டத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளது உறவினர்களான சிறுவர்களும் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

குடும்பமாக கையளிக்கப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரிற்கு என்ன நடந்தது உள்ளிட்ட விடயங்களில் சர்வதேசம் நீதியான விசாரணை மேற்கொள்ள வேண்டும் எனவும் கால நீடிப்பினை வழங்கக் கூடாது எனவும் இதன்போது வலியுறுத்தப்பட்டது. (4-100-316)

# அதிகாரத்தை மீறிய ஜனாதிபதி நீதிமன்றத்தை நாடியுள்ள பொன்சேகா



(கொழும்பு)

கொழும்பு நகரின் சில இடங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாக அறிவித்து ஜனாதிபதி வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை செல்லுபடியற்றது என உத்தரவிடுமாறு கோரி, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா மற்றும் சட்டத் தரணி சுதத் விக்ரமரத்ன ஆகியோர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

சட்டமா அதிபர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன, பொலிஸ் மா அதிபர், இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் சாலிய பீரிஸ் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

அரச இரகசிய சட்டமூலத்தின் கீழ் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர்கள், அந்த சட்ட மூலத்தின் கீழ் இவ்வாறான உத்தரவை வெளியிட ஜனாதிபதிக்கு அதிகாரமில்லை எனவும் கூறியுள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தல் செல்லுபடியற்றது என்ற உத்தரவை பிறப்பிக்குமாறும், இந்த மனுவை விசாரித்து தீர்ப்பை வழங்கும் வரை வர்த்தமானி அறிவித்தல் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இடைக்கால தடையை விதிக்குமாறும் மனுதாரர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (4)

# 2050 நாளை கடந்துள்ள உறவுகளின் போராட்டம்



(குருமன்காடு)

வவுனியா வீதி அபிவிருத்தி அதிகார சபை முன்பாக 2050 ஆவது நாளாக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் தாய்மார் சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு கவனயீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது "எல்லோரும் சிறுவர் தினத்தை கொண்டாடி மகிழ்வாக இருக்கிறார்கள். நாங்கள் சிறுவர் தினத்தை கொண்டாட முடியாத நிலையில் இருக்கின்றோம். நாம் 2050 நாளாக இருப்பது யாருக்கும் தெரியாதா? இன்று நாம் தெருவில் இருந்து கண்ணீர் விடுகின்றோம். எமது பிள்ளைகள் வராமையால் எங்களுக்கு நிம்மதி இல்லை. அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் வந்து தீர்வு பெற்றுத் தர வேண்டும்.

எமது தாய்மாரின் கண்ணீருக்கு பதில் தர வேண்டும். எமக்கு நீதி வேண்டும்" என தெரிவித்தனர். (4-250)

## இரத்ததான முகாம்

(மன்னார்)

மன்னார் இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள தற்காலிக தட்டுப்பாட்டினால் மன்னார் பொறியியலாளர் சம்மேளனம் மற்றும் மன்னார் சிறகுகள் அமைப்பு இணைந்து நடத்தும் மாபெரும் இரத்ததான முகாம் எதிர்வரும் வியாழக்கிழமை 6 ஆம் திகதி மன்னார் பொது மருத்துவமனை இரத்த வங்கியில் காலை 8.30 மணி முதல் நண்பகல் ஒரு மணி வரை இடம்பெறவுள்ளது. (4-285)

# இலங்கை தேயிலையின் உற்பத்திச் செலவு அதிகரிப்பு

(கொழும்பு)

நிலவும் நிதி நெருக்கடி காரணமாக இலங்கை தேயிலையின் உற்பத்திச் செலவு 30 தொடக்கம் 35 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக பெருந்தோட்டத் துறையின் உயர் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இரசாயனப் பசளை மீதான தடை நீக்கப்பட்டுள்ள நிலையில், பெருந்தோட்டங்கள் இரசாயனப் பாவனையை குறைத்துள்ளது.

இந்த நிலையில், உலகளாவிய ரீதியில் இரசாயன பசளைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

இந்நிலையில் எதிர்பாராத விதமாக தமது உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளதாக பெருந்தோட்டத் துறையின் உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் பெருந்தோட்டத்துறை, இலங்கையின் அந்நியச் செலாவணி பற்றாக் குறையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். (4)

# கடலட்டை பண்ணையை எதிர்த்து உணவு தவிர்ப்பு போராட்டம்

(தருமபுரம்)

பூநகரி - கிராஞ்சி இலவன் குடா கடற்பகுதியில் பாரம்பரியமாக சிறகுவலை தொழிலில் ஈடுபட்டு வரும் மீனவர்கள் அப்பகுதியில் கடலட்டைப் பண்ணை அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று முன்தினம் காலை முதல் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.



மீனவர்கள் சிறகுவலை தொழிலின் ஊடாக இறால், நண்டு, மீன் போன்றவற்றை பிடிப்பது அன்றாட வாழ்வாதார தொழிலாக பல ஆண்டுகளாக இருந்து வந்த நிலையில் அவர்களது வாழ்வாதாரத்தை சிதைக்கும் வகையில் தற்போது கடலட்டைப் பண்ணைகள் அமைக்கும் முயற்சிகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன.

இந் நிலையிலேயே உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் அப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் காலையிலிருந்து இரவிரவாக ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் தங்களுக்கு சாதகமான முடிவை சம்பந் தப்பட்டவர்கள் வழங்கும் வரை தாம் போராட்டத்தை கைவிடப் போவதில்லை எனவும் அவர்கள் தெரிவிக்கின்றனர். (4-6-315-316)

# யானைகளின் நடமாட்டத்தால் மன்னார் மடு மக்கள் பதற்றம்

(மன்னார்)

மன்னார் மடு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பெரிய பண்டிவிரிச்சான், சின்ன பண்டிவிரிச்சான் கிராமங்களில் யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

இதன் எதிரொலியாக அண்மையில் சின்னப்பண்டிவிரிச்சானில் தனிநபர் ஒருவரின் காணிக்குப் பின்னால் 54 வயதுடைய நபர் காட்டு யானை தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

மேலும் பெரியபண்டிவிரிச்சான் பகுதியில் கடந்த மூன்று நாட்களாக வயல் வெளியின் அருகில் இருக்கும் வீட்டுக் காணிகளுக்குள் யானை புகுந்து பெறுமதிமிக்க மரங்களை சேதப்படுத்தியுள்ளது.

மேலும் இக் கிராமங்களில் யானைகள் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதால் யானை வேலி போன்றவற்றை அமைத்தும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டும் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு அக்கிராம மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-285)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ஒரு எதிரியை நண்பனாக மாற்றும் ஒரே சக்தி அன்பு மட்டுமே.
>
> – மார்ட்டின் லூதர் கிங்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# எங்கள் பிள்ளைகள் தண்டனைக் கைதிகள் அல்ல

ஒரு மாணவன் பிறழ்வான பாதையில் பயணிக்கிறான் எனில், அவனுக்கு பாடசாலை வாழ்க்கையில் பிடிப்பு இல்லை என்பது பொருள்.

தன் பாடசாலை மீது விருப்பும் ஆசிரியர்கள் மீது அன்பும் சக மாணவர்கள் மீது நட்பும் கொண்ட மாணவன் எந்தச் சந்தர்ப்பத்திலும் பிறழ்வான பாதையில் நாடமாட்டான் என்பதை எங்கும் சத்தியம் செய்ய முடியும்.

அப்படியானால் பாடசாலை வாழ்க்கையில் விருப்பு இல்லாமைக்குக் காரணம் என்ன என்று கேட்டால் ஒரு பெரும் பட்டோலையாக அமையும்.

ஆம், ஆசிரியர்களின் அன்பான வழிகாட்டல் இல்லாத சூழல். குறித்த பாடத்தை விளங்கிக் கொள்வதற்கான ஏதுக்கள் இன்மை. சக மாணவர்களின் துன்புறுத்தல். பாடசாலை நிர்வாகத்தின் கடும்பிடி என அந்தப் பட்டோலை நீண்டு செல்லும்.

இதேபோல ஓர் இளைஞன் போதைப் பாவனையிலும் பிறழ்வான நடத்தையிலும் ஈடுபட்டு தன் எதிர்காலத்தை அழிக்கிறான் எனில், அவனது வீட்டில் அவனுக்கு உரிய அன்பும் அரவணைப்பும் கிடைக்காத நிலைமை. உதாசீனம் செய்கின்ற அவனது ஊரும் உறவும். வழிப்படுத்தத் தவறிய அவனது பாடசாலை. உரிய காலத்தில் வேலைவாய்ப்பு இல்லாத கொடுமை. அவனது இளமைப்பருவத்தின் உற்சாகத்தை பயன்படுத்திக் கொள்ளத் தவறிய சமூக அமைப்புகள் என ஏகப்பட்ட காரணங்களைப் பட்டியல்படுத்த முடியும்.

அந்தவகையில் ஒரு மாணவன் தவறு செய்தால், அவனைத் திருத்தி வழிப்படுத்துவது பாடசாலையின் பணி.

இதனைவிடுத்து தவறுகளைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தண்டனைக்குரிய குற்றம் போல ஆக்கி, சுவடியிருந்து கதைத்து சுவட்டம் போட்டு ஆராய்ந்து பெற்றோர்களை அழைத்து இவர்கள் தண்டனைக்குரிய பிள்ளைகளைப் பெற்றவர்கள் என்பதைக் கூறுவதுபோல நடத்தி நாமெல்லாம் தூயவர்கள் என்று நடிக்கின்ற போது,

அறியாப் பருவத்தில் செய்கின்ற தவறுகளை உலகறிய வெளியிட்டு சம்பந்தப்பட்ட பிள்ளைகளின் வாழ்க்கையை வேரறுத்து விடுகின்றபோது, எல்லாமும் வெறுத்துப்போய் எது நடந்தாலும் பரவாயில்லை என்ற வக்கிர மனநிலைக்கு இளம் பிள்ளைகள் வந்து விடுகின்றனர்.

எனவே இந்த அவல நிலைக்கு நாம் ஒவ்வொருவரும் ஏதோவொரு வகையில் பங்களிப்புச் செய்துள்ளோம்.

ஆகையால் இனியேனும் என் பிள்ளை என்ற பாசத்தை ஊர்ப்பிள்ளைகளிலும் நாம் காட்டுவோம்.

இருள் நிறைந்த பாதையில் பயணிக்கத் தலைப்படும் பிள்ளைகளை அரவணைத்து அன்பு காட்டி அதோ வாழ்க்கைக்கான பாதை என்று ஒளிகாட்டுவோம். வழிகாட்டுவோம்.

இதை நாம் செய்வோமாயின், எல்லாப் பிள்ளைகளும் எல்லா இளைஞர்களும் தூய்மையான மலர்கள் என்பதை இவ்வையகம் கண்டு மகிழும். இது சத்தியமான வாக்கு.

# போராட்டக்களத்தை வழிநடத்தியவர்களை கைது செய்ய வேண்டும்-நாமல்

(கொழும்பு)

போராட்டக்களத்தை வழி நடத்தியவர்களை கைது செய்ய வேண்டும் என ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் போராட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கிய இளைஞர்களை சமூக மயப்படுத்தும் வேலைத்திட்ட மொன்று அவசியம் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

வெலிமடை - நுகதலாவையில் பொதுஜன பெரமுன கட்சியின் மறுசீரமைப்பு கூட்டங்கள் நேற்றைய தினம் இடம்பெற்றிருந்தன.

இந்தக் கூட்டங்களில் கலந்து கொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் போராட்டக்காரர்களுக்காக புனர்வாழ்வு பணியகங்களை அமைக்கும் திட்டம் உள்ளதா என எழுப்பப்பட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில், போராட்டக் களத்துடன் தொடர்புடைய அப்பாவி இளைஞர்களும் இருக்கிறார்கள் என்பதை நாம் உணர வேண்டும்.

அவர்களை சிறையில் அடைத்து தடுத்து வைத்து குறைந்த பட்சம் வேலையொன்றையேனும் பெற்றுக்கொள்ள முடியாதவாறான சூழலை ஏற்படுத்துவது பிழையானவிடயமாகும் என குறிப்பிட்டுள்ளார். (4)

# இரண்டு கோடி பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

அவிசாவளை - வத்தேகடை பிரதேசத்தில் இரண்டு கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான 2 கிலோ 65 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவிசாவளை புலனாய்வு பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று நேற்று முன்தினம் இரவு மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை சோதனையிட்டுள்ளது.

இதன்போது, அவரிடம் ஹெரோயின் அடங்கிய பொதியொன்று கண்டுபிடிக்கப்பட்டதுடன், அதனைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது சந்தேகநபரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த மற்றுமொரு ஹெரோயின் பொதி பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது. (4)

# எரிவாயு விலையை குறைக்கும் இந்தியாவின் நிறுவனம்

(கொழும்பு)

சமையல் எரிவாயுவின் விலையை குறைப்பதற்கு இந்தியாவின் எரிவாயு நிறுவனம் தீர்மானித்துள்ளது.

சர்வதேச ரீதியாக இயற்கை எரிவாயுவின் விலை அதிகரித்துள்ள நிலையில் இந்தியாவினால் இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்படி, தொழிற்துறை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் எரிவாயு கொள்கலன் ஒன்றுக்கான விலை இந்திய ரூபாவில் 25 ரூபா 50 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது. (ம-7)

# புதிய அமைச்சரவை நியமனம் இவ்வாரம் இடம்பெறலாம்

புதிய அமைச்சரவை நியமனம் இவ்வாரம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜப்பான் மற்றும் பிலிப்பைன்ஸிற்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அதிகாலை நாடு திரும்பியுள்ளார்.

இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் போது ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபேயின் இறுதிச் சடங்கில் ஜனாதிபதி கலந்துகொண்டிருந்தார்.

அத்துடன், ஜப்பானிய பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களையும் அவர் சந்தித்து பேசியிருந்தார்.

அதன் பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆளுநர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்குவதற்காக பிலிப்பைன்ஸிற்கு சென்றிருந்தார்.

இந்நிலையில் புதிய அமைச்சரவை நியமனம் இவ்வாரம் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மதியம் 1.00 மணிவரை **கிளிநொச்சி பிரதேசத்தில்** எஸ்.ஆர் அரிசி ஆலையடி, ஸ்கந்தபுரம், அக்கராயன், கண்ணகிபுரம், விநாயகர் குடியிருப்பு ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# கொழும்பில் விபசார விடுதி சுற்றி வளைப்பு மூவர் கைது

ஆயுர்வேத மசாஜ் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதி ஒன்றை பொலிஸார் சுற்றிவளைத்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் பிரகாரம், கல்கிஸ்ஸ செரமிக் வீதியிலுள்ள இடமொன்றில் நடாத்திச் செல்லப்பட்ட குறித்த விபசார விடுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது விபசார விடுதியை நடத்தி வந்த 25 வயதுடைய ஆணும் இரண்டு இளம் பெண்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிபில மற்றும் திஹகொட பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 25 மற்றும் 35 வயதுடைய இரண்டு யுவதிகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# இலங்கையில் தேங்காய் விலை உயர்வடையும்

(கொழும்பு)

இலங்கையில் தேங்காய்களின் விலை 1.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற தேங்காய் ஏல விற்பனையின் போது ஆயிரம் தேங்காய்களின் விலை 58,516.87ஆக நிலவியது.

இலங்கை தெங்கு அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட இந்த ஏலத்தில் கிடைத்த அதிக விலை 68,000 ரூபாவாகும்.

ஏற்கனவே அதற்கு முந்திய வாரத்தில் 1,000 தேங்காய்களுக்கு ஏலத்தில் கிடைத்த விலை 63,700ஆக நிலவியது.

இந்நிலையில் இந்த ஏலத்தின் போது 10 இலட்சத்து 18 ஆயிரத்து 186 தேங்காய்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

அதில், 7 இலட்சத்து 6 ஆயிரத்து 9 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டன.

இதேவேளை, கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் தேங்காய் அடிப்படையிலான பொருட்களின் ஏற்றுமதி 7 சதவீதத்தால் அதிகரித்து அதன் வருமானம் 573 மில்லியன்களாக உயர்ந்துள்ளது. (ம-7)

## குழந்தையை விற்க முயற்சி

# இலங்கைப் பெண் டுபாயில் கைது

சுமார் 12,000 திர்ஹமிற்கு குழந்தையை விற்க முயற்சித்த இலங்கை பெண் உள்ளிட்ட மூவர் டுபாயில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

35 வயதான இந்தோனேஷிய பெண் ஒருவர் பணத் தேவை இருப்பதாகக் கூறி, தனக்கு பிறந்த ஆண் குழந்தையை விற்க முயற்சித்துள்ளார்.

குழந்தையை விற்கும் நடவடிக்கையில் இலங்கை பெண்ணும் மேலும் இருவரும் உதவி செய்துள்ளனர். 45 வயதான குறித்த இலங்கை பெண் 2 மாதங்களேயான குழந்தையை விற்பதற்காக கடந்த பெப்ரவரி மாதம் ஒன்லைன் ஊடாக அறிவித்தல் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுர்த்தி கொடுப்பனவிற்கு விண்ணப்பிக்க வழங்கப்பட்ட கால அவகாசம் நீடிப்பு

(கொழும்பு)

சமுர்த்தி உள்ளிட்ட அரச கொடுப்பனவுகளை பெற்றுக் கொள்ள எதிர்பார்ப்போரிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்பதற்கான கால அவகாசம் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைய இருந்ததாக சமுர்த்தி அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி குறிப்பிட்டார்.

எனினும் அதிகமானோருக்கு அரச கொடுப்பனவுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்வதற்கான கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சமுர்த்தி, முதியோர், விசேட தேவையுடையோர், சிறுநீரக நோயாளர் ஆகியோருக்கான கொடுப்பனவுகளை பெற்றுக்கொள்ள எதிர்பார்ப்போர் கிராம உத்தியோகத்தரினூடாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

தற்போது அரச கொடுப்பனவுகளை பெறும் அனைவரும் மீள விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் என சமுர்த்தி அபிவிருத்தி பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி குறிப்பிட்டார். (4)

## முதல் முறையாக

# அமெ. உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக கறுப்பினப் பெண்




(வோஷிங்டன்)

அமெரிக்க உச்ச நீதிமன்றத்தின் முதல் கறுப்பின பெண் நீதிபதியாக கேதன்ஜி பிரவுன் ஜாக்சன் பதவியேற்றார்.

51 வயதான கேதன்ஜி 116 ஆவது நீதிபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரத்தின் போது கறுப்பினப் பெண்ணை நாட்டின் மிக உயர்ந்த நீதித்துறைக்கு நியமிப்பதாக பைடன் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (4)

# 10 லீற்றர் எரிபொருள் வழங்கினால் கட்டணங்கள் குறைக்கப்படும்

## மு.வண்டி உரிமையாளர்கள் சங்கம்

(கொழும்பு)



முச்சக்கர வண்டிகளுக்கு மேலும் 10 லீற்றர் எரிபொருளை வழங்க எரிசக்தி அமைச்சு அனுமதித்தால், முச்சக்கர வண்டி கட்டணங்கள் குறைக்கப்படும் என அகில இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சுதில் ஜயருக் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான கலந்துரையாடல் கடந்த வாரம் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றதாகவும் அவர் தெரிவித்தார். இக்கலந்துரையாடலின் போது, எரிபொருள் ஒதுக்கீடை மேலும் 10 லீற்றரால் அதிகரிக்க ஜனாதிபதியின் ஆலோசகர் தீர்மானத்திற்கு வந்ததாக அவர் குறிப்பிட்டார்.

பின்னர், மேலதிக எரிபொருளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தங்களின் இந்தத் தீர்மானம் தொடர்பில் தெரிவித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4)

## போலி மதுபானத்தை அடையாளம் காண செயலி

(கொழும்பு)

போலி மதுபானங்களுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக அவற்றை உடனடியாக கணனி மூலம் அடையாளம் காணக்கூடிய செல்போன் செயலி ஒன்றை மதுவரி திணைக்களம் அறிமுகப்படுத்தியுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். EXCISE TAX STAMP VALIDATOR என்ற பெயரில் இருக்கும் இந்தச் செயலி Google Play மற்றும் Apple Store ஆகியவற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தி சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள மதுபான போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள ஸ்டிக்கரை செயலியில் உள்ள QR மூலம் ஸ்கேன் செய்வதன் ஊடாக மதுபானம் போலியானதா அல்லது அசலா என்பதை அறிந்துக்கொள்ள முடியும்.

QR ஸ்கேன் அதனை ஏற்க மறுத்தால் முறைப்பாடு செய்ய முடியும் என்பதுடன் உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ரஞ்சித் சியம்பலாபிட்டிய மேலும் தெரிவித்துள்ளார். (4)

# நாடளாவிய ரீதியாக 4000 அதிபர் வெற்றிடங்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள பாடசாலைகளில் அதிபர்களுக்கான வெற்றிடங்கள் காரணமாக பல பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக இலங்கை அதிபர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிபர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்படாததன் காரணமாக நாட்டில் தற்போது 4000 இற்கும் மேற்பட்ட அதிபர் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை அரச ஊழியர்களின் ஓய்வுபெறும் வயதை 60 ஆக மட்டுப்படுத்தியுள்ள நிலையில் பெருமளவிலான அதிபர்களும் இவ்வருடம் ஓய்வு பெறவுள்ளதாக இலங்கை அதிபர் சேவைகள் சங்கத்தின் தலைவர் சுனில் பிரேமதிலக தெரிவித்துள்ளார். (4)

# பாராளுமன்றத்திலும் உணவுப் பொருட்கள் திருட்டு

(கொழும்பு)

பாராளுமன்ற உணவகப் பிரிவில் இறைச்சி, மீன், முட்டை மற்றும் கருவாடு போன்ற உணவுகள் வெளியில் எடுத்துச் செல்லப்படும் சம்பவங்கள் முன்னர் எப்போதும் இல்லாதவாறு தற்போது அதிகரித்துள்ளதாக தெரியவருகிறது.

இவ்வாறு உணவுப் பொருட்கள் வெளியில் எடுத்துச் செல்லப்படுவதால், அரசுக்கு வருடாந்தம் மிகப்பெரிய நட்டம் ஏற்பட்டு வருவதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இறைச்சி, மீன், முட்டை போன்றவற்றின் விலை அதிகரித்துள்ளமை காரணமாக சில ஊழியர்கள் அவற்றை தினமும் இரகசியமாக வீடுகளுக்கு எடுத்துச் செல்வதாக தெரியவந்துள்ளது. (4)

## இரு ஆண்களின் சடலங்கள் மீட்பு

(ஹற்றன்)

நுவரெலியா, வலப்பனை பகுதியில் குழியொன்றுக்குள் இருந்து இரு ஆண்களின் சடலங்கள் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளன.

புதையல் தேடல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்டிருந்த நிலையிலேயே இவர்கள் உயிரிழந்துள்ளனர் என சந்தேகிக்கப்படும் நிலையில், இது தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வலப்பனை, குருதுஓயே பகுதியில் உள்ள புதையல் அல்லது மாணிக்கக்கல் அகழ்வு இடம்பெறும் பகுதியென கருதப்படும் குழியொன்றில் இருந்தே 61 வயதான அபேசிங்க பண்டா மற்றும் 30 வயதான ருவான் குமார ஆகிய இருவரும் சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

இருவரும் வீடு திரும்பாத நிலையில் அது தொடர்பில் உறவினர்கள் வலப்பனை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து முன்னெடுக்கப்பட்ட தேடுதல் விசாரணையின்போதே சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (4)

# சாரதி அனுமதிப் பத்திரம் அச்சிடுவதில் தாமதம்

(கொழும்பு)




சாரதி அனுமதி பத்திரம் அச்சிடுவதற்கான சிறப்பு அட்டையை இறக்குமதி செய்யத் தேவையான அந்நியச் செலாவணி பற்றாக்குறையால் கடும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக அச்சிடப்பட வேண்டிய 9 லட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதி பத்திர விண்ணப்பங்கள் குவிந்துள்ளதாக மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தெரிவித்துள்ளது.

விண்ணப்பம் செய்யப்பட்ட ஐம்பதாயிரம் அட்டைகள் மட்டுமே கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாக திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்நியச் செலாவணி பிரச்சினை ஓரளவுக்கு தீர்ந்தாலும், குவிந்து கிடக்கும் சாரதி அனுமதி பத்திரங்கள் அச்சிட்டு வழங்குவதற்கு கணிசமான காலம் எடுக்கும் என பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 280 | 300 | 300 | 250 |
| உருளைக்கிழங்கு | 240 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 260 | 250 | 300 | 300 |
| தக்காளி | 200 | 250 | 220 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 240 |
| கோவா | 420 | 400 | 450 | 450 |
| கரட் | 350 | 380 | 400 | 450 |
| பூசணி | 200 | 150 | 160 | 200 |
| புடோல் | 220 | 220 | 200 | 200 |
| வாழைக்காய் | 200 | 150 | 150 | 120 |
| சின்னவெங்காயம் | 350 | 350 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 160 |
| பாகற்காய் | 700 | 800 | 700 | 700 |
| வெண்டக்காய் | 200 | 240 | 150 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 200 | 240 |
| பயற்றங்காய் | 400 | 250 | 300 | 280 |
| லீக்ஸ் | 320 | 300 | 260 | 350 |
| பீற்றூட் | 280 | 280 | 200 | 350 |
| கறிமிளகாய் | 800 | 700 | 600 | 700 |
| முருங்கைக்காய் | 600 | 500 | 400 | 500 |
| போஞ்சி | 400 | 400 | 450 | 450 |
| கத்தரிதம்புள்ள | 250 | 250 | 200 | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 150 | 100 |
| தேசிக்காய் | 400 | 350 | 400 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 350 | 400 | 400 |
| முள்ளங்கி | 120 | 200 | 160 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 70 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 140 | 100 | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோல்...

அறிவித்துள்ளது.

இதன்படி, ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 40 ரூபாயால் குறைக்கப்படவுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 450 ரூபாயாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 410 ரூபாயாக குறைக்கப்படவுள்ளது.

அத்துடன், ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 30 ரூபாயால் குறைக்கப்படவுள்ளது.

இதற்கமைய, 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 540 ரூபாயாக இருந்த நிலையில், புதிய விலை திருத்தத்துக்கு அமைய 510 ரூபாயாக குறைக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த விலைக்குறைப்புக்களுக்கு நிகராக தாமும் நள்ளிரவு முதல் பெற்றோல் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கவுள்ளதாக லங்கா ஐஓசி நிறுவனம் அறிவித்துள்ளது. (ம-7)

## மின்கசிவினால்...

பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று சனிக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடுல் உள்ள ஏ.ஜி.ஏ ஒழுங்கையில் உள்ள வீடு ஒன்றில் உள்ள அறையில் அதிகாலை 4.30 மணியளவில் தீ பரவியதால் மற்றைய அறையில் இருந்தவர்கள் கதவை திறந்து பார்த்த போது இளம் தம்பதிகள் இருவரும் தீயில் கருகி சடலங்களாக காணப்பட்டனர்.

இவ்வாறு சடலங்காலமாக மீட்கப்பட்டவர்கள் சரவணபவா ரஞ்சித்குமார் (வயது-31) அவரது மனைவியான ரஞ்சித்குமார் கிருஷாந்தி (வயது- 26) என்பவர்களாவர்.

இம்மரணம் தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராஜா சம்பவ இடத்திற்கு சென்று சடலங்களை பார்வையிட்டார்.

ஆணின் சடலம் கட்டிலிலும் பெண்ணின் சடலம் மின்சார பிளக் பொயின்ற்றிற்கு அருகாமையில் தொலைபேசி சாச்சர் வயர் ஒன்றை கையில் பிடித்தவாறும் காணப்பட்டது.

மேலும் உருகிய பிளாஸ்ரிக்குகளும் காணப்பட்டன.

அறையில் பெற்றோலின் மணமும் வீசியுள்ளது.

விசாரணைகளை மேற்கொண்ட மரண விசாரணை அதிகாரி பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். பிரேத பரிசோதனையில் மின்சாரக்கசிவினால் மரணம் சம்பவித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மின்சார கசிவு ஏற்பட்ட போது பெண் சாச்சர் வயரை பிடிக்கும் போது உயிரிழப்பு ஏற்பட்டதாகவும் அதன் பின்னர் அந்த அறையில் இருந்த பெற்றோல் கலன் வெடித்து தீப்பற்றியிருக்கலாம் என நம்பப்படுகிறது. இது தொடர்பிலான விசாரணைகளை வல்வெட்டித்துறை பொலிஸார் மேற்கொண்டனர். (ம-7,18,33,60,104)

## கடற்றொழிலுக்...

வேண்டாமென மீனவர்கள், கடல்சார் ஊழியர்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்பு தொடர்பிலான அறிவித்தல் ஊடாக வளிமண்டலவியல் திணைக்களம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. குறித்த கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே மணித்தியாலத்திற்கு 60 தொடக்கம் 70 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடுமென திணைக்களம் தெரிவித்துள்ளது.

காலி முதல் புத்தளம் மற்றும் காங்கேசன்துறை ஊடாக திருகோணமலை வரையான கடற்பிராந்தியங்களில் இடைக்கிடையே 50 தொடக்கம் 60 கிலோமீற்றர் வேகத்தில் பலத்த காற்று வீசுமெனவும் வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது. இதற்கமைய, காலி முதல் கொழும்பு ஊடாக மன்னார் வரையான கடற்பிரதேசங்களில் அவதானத்துடன் செயற்படுமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ம-7)

## அடிபணிந்தார்...

டுள்ளார்.

சில இடங்களை அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தி ஜனாதிபதியினால் விசேட வர்த்தமானி கடந்த வாரம் வெளியிடப்பட்டிருந்தது.

பாராளுமன்ற கட்டடத்தொகுதியை அண்மித்த பிரதேசம், உயர் நீதிமன்ற வளாகம், மேல் நீதிமன்ற வளாகம், கொழும்பு நீதவான் நீதிமன்றம், சட்டமா அதிபர் திணைக்களத்தை அண்மித்த பிரதேசம், ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை கடற்படைத் தலைமையகம், பொலிஸ் தலைமையகத்தை அண்மித்த பகுதிகள், அதி உயர பாதுகாப்பு வலயங்களாக பெயரிடப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ரணில் அரசால்...

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இது நிலையான அரசு இல்லை. அதுதான் அதிலிருந்து நாம் வெளியேறி சுயாதீனமாகச் செயற்படுகின்றோம். நாடு மீண்டெழ வேண்டுமெனில் நிலையான அரசு ஆட்சியில் இருக்க வேண்டும்.

எனவே, அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முதலில் பொதுத்தேர்தலை நடத்த வேண்டும். அப்போதுதான் மக்களின் தற்போதைய மனநிலையை அறிந்துகொள்ள முடியும்" என்றார். (ம-7)

## மதுபானம்...

இதன்படி சிகரெட் ஒன்றின் விலை 5 ரூபாயாலும் 750 மில்லிலீற்றர் மதுபான போத்தல் ஒன்றின் விலை 150 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

140 பில்லியன் மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் எதிர்பார்ப்பில் சமூக பாதுகாப்பு பங்களிப்பு வரியை அரசாங்கம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தியுள்ளது.

இதற்கமையவே சிகரெட் மற்றும் மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளன. (ம-7)

## இலங்...

கள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கி வருவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

கோவிட் தொற்று பரவலினால் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால், சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மற்றும் பல்வேறு தொழில் வல்லுநர்கள் தொழில் வாய்ப்புக்களை இழந்து வீதிக்கு இறங்கிய நிலையில், தற்போதும் அவ்வாறான நிலையேற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## விரிவு...

இஸ்லாமிய நாகரிகங்கள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அருட் கலாநிதி யோ.கி. போல் றொகான், நுண்கலைத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் ஆகியோரைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்த்துவதற்குப் பல்கலைக் கழகப் பேரவை நேற்று ஒப்புதல் வழங்கியது.

பல்கலைக்கழகப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நேற்று சனிக்கிழமை காலை, துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்கு அமையப் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த அருட் கலாநிதி யோ.கி. போல் றொகான், கலாநிதி தா. சனாதனன் ஆகியோரின் விண்ணப்பங்களை மதிப்பீடு செய்த, மூதவையினால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கைகள், நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன நேற்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையில், கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய நாகரிகங்கள் துறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான அருட்கலாநிதி யோ.கி.போல்றொகான் கிறிஸ்தவநாகரிகத்தில் பேராசிரியராகவும், நுண்கலைத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தா. சனாதனன் நுண்கலைத்துறையில் கலை வரலாற்று (துறைக்குரியஇருக்கை) பேராசிரியராகவும் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ம-7,18,33)

மஹஜன சம்பத
திகதி 2022/10/01
சீட்டிழுப்பு இலக்கம் 4895
Z 2 0 3 6 6 4

ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 204
மிதுனம் 15 39 43 46 மிதுனம்

மெகா பவர்
திகதி 01/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1243
P 07 12 25 53 58

கொவிசெத
திகதி 2022.10.01
சீட்டிழுப்பு இலக்கம் 3137
E 01 06 09 62

தன நிதானய
திகதி - 2022.10.01
சீட்டிழுப்பு இலக்கம் - 925
C 12 20 40 63

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1350
ரிஷபம் 4 1 3 3 6 4

அத கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1696
சீட்டிழுப்பு திகதி: 2022.10.01
ரூ. 3,305,160/-
08 32 44 51 Y

சனிதா
சனிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2022.10.01
சீட்டிழுப்பு இல: 4031
ரூ. 3,375,860/-
09 43 45 75 T

வசனா 26
V 08 13 54 67 70
சீட்டிழுப்பு இலக்கம் 1046
சிவப்பு
2022.10.01 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 266,279,195.80
தொலைபேசி: 011-2 333 546-47
Web: www.dlb.lk

சம்பத வாசனாவ
வெற்றி வாரம் 532
திகதி 2022-10-01
வர்ணம் சிவப்பு
N 10 42 59 02
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,054,316/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1870
நிறம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.10.01
தினம் சனிக்கிழமை
Z 06 10 32 56
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத்தொகை ரூ. 2,490,600/-

ஜய ரெகா
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,512,100/-
திகதி 2022-10-01
வெற்றி வாரம் 3582
வர்ணம் இள நீலம்
08 13 15 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத்தொகை ரூ. 10,293,620/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்க்கசிவு பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு
## Water Proofing

- மழை காலங்களில்' உங்கள் கட்டடங்கள், வீடுகள், கோவில்களில் ஏற்படும் நீர்க்கசிவினைத் தடுப்பதற்கு Finex ஸ்தாபனத்தாரின் அசல் கட்டட இரசாயனப் பொருட்களை கொள்வனவு செய்யும் போது Finex ஸ்தாபனத்தில் அனுமதி பெற்ற முகவர்களாகிய எம்மிடம் மட்டும் பெற்றுக் கொள்ளவும். போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.
- 10 வருட உத்தரவாதத்துடன் நிரந்தரமாக சீர்செய்யப்படும்.

1 சதுர அடி 150/=இல் இருந்து (C-5009)

போலி இரசாயனத்துடன், போலி முகவர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து வேலை கேட்பார்கள். ஏமாற வேண்டாம். உத்தரவாதம் தரும் பொழுது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்ந்து பார்க்கவும்.

உலகத்தரம்மிக்கது

வட மாகாணத்தில் முதன் முதலில் 12 வருடங்களுக்கு முன் அறிமுகம் செய்தவர்கள்

FINEX இரசாயனப் பொருட்களை விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**North and East Engineering**
55, Stanly Road, Jaffna, Sri Lanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000

## கணித பாட ஆசிரியர் தேவை

தரம் 6-11 வரையான வகுப்புகளுக்கு கற்பிக்கக்கூடிய புதிய கல்வி நிலையம் ஒன்றுக்காக ஆசிரியர் தேவை.
இடம் - தெல்லிப்பளை (12935)

**077 834 3666**

## இராஜ மருத்துவம்

கரப்பன், கிரந்தி, சோரியாசிஸ், மதுமேகம், வெள்ளைபடுதல், கெர்ப்பவாயு, தீட்டு ஒழுங்கீனம், உடல்மெலிவு, பருமன், செங்கமாரி, பக்கவாதம், ஆண்மைக்குறைவு, சிறிய மார்பகம், மன அழுத்தம். *சிகிச்சை பெறுவதற்கு* T.P : 076 274 4488
பேரறிஞர் Dr.K.பாலசுப்பிரமணியம் (சிறப்பு ஆலோசகர்) (C-5010)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் இருபாலையில் 02 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதியில் இருந்து 1 km தூரத்தில்
- 2 பரப்பாக (நிலப்பரப்பு) பிரிக்கப்பட்ட நிலையில்
- BH Lane விக்கினேஸ்வரா சனசமூக நிலையம் அருகாமையில்
- 18 அடி பாதையுடன் நல்ல சூழல் நன்னீர் ஊற்று நிலம்
- யாழ். நகரில் இருந்து 4 km தூரம்
- 1 பரப்பின் விலை 600,000/= ரூபாய் (ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் காலை 9.00 மணியிலிருந்து மாலை 6.00 மணி வரை

(12971)

**077 288 0152, 077 148 8348**

## Sun Star Repairing Shop

Desktop, Laptop உதிரிப்பாகங்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். பாவித்த PCகள் Laptopகள் Monitorகள் வாங்கப்படும், விற்கப்படும். Laptopகள், PCகள், Monitorகள் பழுது பார்க்கப்படும்.

**077 914 7472, 077 503 4802**

அழைப்பு மேற்கொண்டால் வந்து பார்க்கப்படும்.
Kantharmadam, Palaly Road, Jaffna. (12926)

## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை பனிக்கன்தோட்டம் பகுதியில் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (12960)

பரப்பு 9 இலட்சம் / Negotiable

தொடர்பு:- **075 284 3415**

## தேவை

வட மாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கவிருக்கும் உணவகத் தொடர் (Restaurant Chain) இற்கு கீழ் குறித்த இடங்களில் 2 பரப்பு வெற்றுக் காணி/ தகுந்த கட்டடத் தொகுதி/ வீடுகள் நீண்டகால குத்தகைக்கு or விற்பனைக்கு தேவை.
**( யாழ்ப்பாணம், பருத்தித்துறை, நெல்லியடி, கொடிகாமம், சாவகச்சேரி, காங்கேசன்துறை, மானிப்பாய், சங்கானை, பளை, கிளிநொச்சி, பரந்தன், பூநகரி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு இரணைமடு, மன்னார் )** (12939)

**074 090 5117**
**077 725 1036**

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்
**IELTS, A1UK EXAM , ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH**

- Guaranteed to 7.5 in IELTS Exam.
- Pass in UK A1 Exam.
- Exam Registration center.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam, IELTS } புதிய பிரிவுகள் ஆரம்பம் (12708)

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam junction, jaffna.
TP: 077 780 3970, 074 007 1970

## Sb Travels இற்கு வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம், 198 கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள Travels இற்கு Air Ticketing and System Knowledge அனுபவமுள்ள பெண்கள் வேலைக்குத் தேவை.
அல்லது Training வழங்கப்படும்.
**077 108 3481**
**021 222 8555**
sbtravels99@yahoo.com (C-5004)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் 15 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு

- மல்லாகம் சந்தியிலிருந்து பலாலி விமான நிலையம் செல்லும் பிரதான காபற் வீதிக்கு அருகாமையில்
- தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 750m தூரத்தில்
- K.K.S வீதியில் இருந்து 1Km தூரத்தில்
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(12924)

தொடர்பு **076 755 8606**

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 15 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

**பார்வையிடும் நேரம்**
காலை 6.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - **ஜெயம்**

**077 814 7389, 077 241 7589** (C-12954)

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடியில் 12 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- A9 வீதியில் இருந்து இரண்டாவது காணி (50M தூரம்)
- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- கைதடிச் சந்தியிலிருந்து 500M தூரத்தில்
- 18 அடிப் பாதையுடன் நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- வீடுகள், திருமண மண்டபம் அமைக்க உகந்த சூழல்
- ஒரு பரப்பின் விலை 7½ இலட்சம் (7,50,000/-) மட்டும்
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 6 வரை

(12924)

**077 658 5999**

## காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் 4 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- நான்கு பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்ப்பாணம் காரைநகர் செல்லும் பிரதான வீதி முகப்புடன் (காபற் வீதி)
- 784 இலக்க போக்குவரத்து பேருந்துகள் அதிகம் செல்லும் வீதி
- பொன்னாலை ரவுண்டப்போட் சந்தியில் இருந்து 1 km தூரத்தில்
- வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி (Jaffna College) இருந்து 1km தூரத்தில்
- ஒரு பரப்பின் (நிலப்பரப்பு) விலை 1½ இலட்சம் மட்டும்
- 20 அடிப் பாதையுடன்

(12924)

தொடர்புகளுக்கு:- **077 288 0152**


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org